# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT
# 2022

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

NATIONAL FILM CORPORATION OF SRI LANKA

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை
## 2022

திகதி :- 2023.05.24

எனது இலக்கம் NFC/119/02/01/01 - 2022

செயலாளர்
வெகுசன ஊடாக அமைச்சின் மூலம்,

கலாநிதி பந்துல குணவர்தன அவர்கள்
வெகுசன ஊடக அமைச்சு,
163, "அசிதிசி மெதுர"
கிருளபன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 05.

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**ஆண்டறிக்கை - 2022**

1980 ஆம் ஆண்டு இலக்கம் 45 இனைக் கொண்ட சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டு இலக்கம் 47 இனைச் சேர்ந்த இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு இலக்கம் 38 இனையுடைய நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான பின்வரும் ஆவணங்களுடன் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

1. 2022 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கூற்றுக்கள்
2. 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் இலாப நட்ட கணக்குகள், அவை சார்ந்த குறிப்புக்கள் மற்றும் அத் திகதிக்கான இருப்புநிலைப் பதிவேடு
3. 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இப்படிக்கு உண்மையுள்ள,

ஒப்பம் - சட்டத்தரணி தீபால் ஷந்திரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

ஜீ. ஏ. கித்சிரி
பொது முகாமையாளர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# நிர்வாக அறிக்கை

01. அறிமுகம்

02. பணிப்பாளர் குழு

03. உள்நாட்டு திரைப்படத் தயாரிப்புக்கள்

04. மனித வள மற்றும் நிர்வாக நடவடிக்கை

05. திரைப்பட விளம்பரம் / சினே அட்ஸ்

06. சினிமாக் கலாசாரம் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள்

07. திரைப்படக் கண்காட்சி

08. உள்நாட்டு வழங்கல்கள் - ஏற்றுமதி  மற்றும் இறக்குமதி

09. கணக்காய்வு நடவடிக்கைகள்

10. நிதி நடவடிக்கைகள்

11. சட்ட நடவடிக்கைகள்

12. கலையகம்

13. புலனாய்வு நடவடிக்கைகள்

14. திட்டங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் பயிற்சிகள்

15. மருத்துவ உதவித் திட்டங்கள்

16. நலன்புரித் திட்டம்

17. சமய நடவடிக்கைகள்

18. விளையாட்டுச் சங்கம்

19. தொழிற் சங்கம்

20. நன்றி நவிழல்

## 01. அறிமுகம்

1980 இலக்கம் 45 இனையுடைய சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1971 இலக்கம் 47 இனைச் சேர்ந்த இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவு மற்றும் 1971 இலக்கம் 38 இனையுடைய நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் படி கலாநிதி பந்துல குணவர்தன அவர்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கை.

2022 ஆம் ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது செயற்பாட்டு ஆண்டுக்கான அறிக்கையாகும்.

## 02. பணிப்பாளர்க் குழு

2022 ஆம் ஆண்டினுள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் பின்வருமாறு பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

2022.01.01 ஆந் திகதி முதல் 2022 மே மாதம் வரை அவ்வப்போது நியமனம் பெற்ற பணிப்பாளர் குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. | கலாநிதி ஜயந்த தர்மதாஸ | தலைவர்<br>இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் |
| 02 | திரு. மொஹான் சமரநாயக | தகவல் பணிப்பாளர் நாயகம்<br>அரசாங்க தகவல் திணைக்களம் |
| 03 | திரு. ஷந்திரபால் லியனகே | பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| 04 | திருமதி. தரணி அனோஜா கமகே | கலாசார அலுவல்கள் பணிப்பாளர்<br>கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| 05 | கலாநிதி தம்மிக திஸாநாயக | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| 06 | கலாநிதி கோலின பானு திஸாநாயக | பீடாதிபதி ( பீடம்)<br>கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் |
| 07 | கலாநிதி ரவீந்திர ரன்தெணிய | புலமை பெற்ற நடிகர் |
| 08 | திரு. தம்மித் பொன்சேகா | புலமை பெற்ற நடிகர் |
| 09 | திருமதி. என். பி. ஏ. ஆர். ஜயவர்தன | திறைசேரிப் பிரதிநிதி |
| | திருமதி. டப்ளியூ. ஏ. ஜே. சீ. விக்கிரமாரச்சி | |
| | திரு. ஜூட் நிலுக்ஷான் | |
| 10 | திரு. திலக் ஹெட்டிஆரச்சி | மேலதிக செயலாளர்<br>( ஊக்குவிப்பு)<br>புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| 11 | திருமதி. கே. ஏ. டீ. ஆர். ராஜிகா விக்கிரமசிங்ஹ | செயலாளர்,<br>தேசிய பாரம்பரியம், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலைகளுக்கான இராஜாங்க அமைச்சு |
| 12 | திருமதி. வசந்தி ஷதுராணி | புலமை பெற்ற நடிகர் |

2022 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு புதியதொரு தலைவரையும், பணிப்பாளர் குழுவையும் நியமனம் செய்வதற்கு நிரல் அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01 | சட்டத்தரணி தீபால் ஷந்திரத்ன | தலைவர்<br>இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் |
| 02 | திரு. தினித் ஷிந்தக கருணாரத்ன | அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்<br>அரசாங்க தகவல் திணைக்களம் |
| 03 | திரு. நளின் குமார நிஷ்ஷங்க | பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| 04 | திருமதி. தரணி அனோஜா கமகே | கலாசார அலுவல்கள் பணிப்பாளர்<br>கலாசார அலுவல்கள் திணைக்களம் |

| | | |
|---|---|---|
| 05 | ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக | பணிப்பாளர் குழு உறுப்பினர் |
| 06 | திரு. ஆஸ்லி ரத்னவிபூஷண | பணிப்பாளர் குழு உறுப்பினர் |
| 07 | திருமதி. நதீகா குணசேகர | பணிப்பாளர் குழு உறுப்பினர் |
| 08 | திரு. பி. பி. எஸ். ஆர். த சில்வா | பணிப்பாளர்<br>வெளிநாடு வளங்கள் திணைக்களம்<br>திறைசேரிப் பிரதிநிதி |

## 03. உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பு

| | விபரம் | முன்னேற்றம் (ரூபா. சதம்) |
|---|---|---|
| 01. | **உள்நாட்டு திரைப்படங்களை பதிவு செய்தல்**<br>**திரைப்படங்களின் எண்ணிக்கை - 30**<br>( ஒரு திரைப்படத்திற்கு ரூபா. 5000.00 என்ற தொகை பதிவுக் கட்டணமாக அறவிடப்படும்) | **150,000.00** |
| | திரைப்படங்களின் பெயர்களை மாற்றம் செய்வதற்கான கட்டணம் - 04<br>(ஒரு திரைப்படத்திற்கு ரூபா. 3000.00 வீதம் அறவிடப்படும்) | **12,000.00** |
| | | **162,000.00** |
| 02. | திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கான கூட்டுத்தாபன நிதியம்<br>≠ **ஒய்வூதியம் செலுத்துதல்.**(ஒருவருக்கு ரூபா. 5000.00 வீதம்) | |
| | சனவரி - 139 பேருக்கு, | **695,000.00** |
| | பெப்ரவரி - 164 பேருக்கு, | **820,000.00** |
| | மார்ச் - 161 பேருக்கு, | **805,000.00** |
| | ஏப்ரல் - 161 பேருக்கு, | **805,000.00** |
| | மே - 160 பேருக்கு, | **800,000.00** |
| | ஜூன் - 159 பேருக்கு, | **795,000.00** |
| | ஜூலை - 157 பேருக்கு, | **785,000.00** |
| | ஆகஸ்ட் - 157 பேருக்கு, | **785,000.00** |
| | செப்டம்பர் - 157 பேருக்கு, | **785,000.00** |
| | ஒக்டோபர் - 157 பேருக்கு, | **785,000.00** |
| | நவம்பர் - 157 பேருக்கு, | **785,000.00** |
| | திசெம்பர் - 56 பேருக்கு, | **780,000.00** |
| | | **9,425,000.00** |

| | | |
|---|---|---|
| 03. | தனிச் சிறப்பு வாய்ந்த கலைஞர்களுக்காக :<br>**<u>மருத்துவ உதவித் திட்டங்கள்</u>**<br>➢ **திரு. சேனக விஜேசிங்க**<br><br>**<u>மரண இறுதிச் சடங்குக் கொடுப்பனவு</u>**<br>➢ **திரு. தர்ஷன் தர்மராஜ்** | **50,000.00**<br><br>**25,000.00** |
| | | **75,000.00** |
| 04. | **<u>திரைப்பட இறக்குமதி</u>**<br>2023 ஆம் ஆண்டிற்கான திரைப்பட விநியோகஸ்தர்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரல்.<br>(ஒரு விண்ணப்பப் படிவத்துக்கு ரூபா. 50,000.00 வீதம்)<br>அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ள விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை - 20 ஆகும்.<br><br>இவ் வருடத்தில் தமிழ்/ ஆங்கிலம் / ஹிந்தி மொழிகளில் இறக்குமதி செய்யப்பட்ட மொழி ரீதியான திரைப்படங்களின் எண்ணிக்கை 150 ஆகும்.<br>( ஒரு திரைப்படத்திற்கு ரூபா. 5,000.00 வீதம் ) | **1,000,000.00**<br><br>**750,000.00** |
| | | **1,750000.00** |
| 05. | **<u>வெளிநாட்டு படப்பிடிப்புக்களுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.</u>**<br><br>**27 - அறிக்கை நிகழ்ச்சிகள்**<br>- ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 25000.00 வீதம்<br>- வெளிநாட்டு உறுப்பினர் 91 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 2000.00 வீதம்) | **675,000.00**<br>**182,000.00** |
| | | **857,000.00** |
| | **04 - வெளிநாட்டு முழு நீளத் திரைப்படங்கள்**<br>- ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 150,000.00 வீதம்<br>- வெளிநாட்டு உறுப்பினர் 159 பேருக்கு (ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீதம் ) | **600,000.00**<br>**318,000.00** |
| | | **918,000.00** |
| | **01 - குறுந் திரைப்படம்**<br>- ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 75,000.00<br>- வெளிநாட்டு உறுப்பினர் 16 பேருக்கு (ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீதம் ) | **75,000.00**<br>**32,000.00** |
| | | **107,000.00** |
| | **02 - T.V Drama**<br>- ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 75,000.00 வீதம்<br>- வெளிநாட்டு உறுப்பினர் 170 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீதம் ) | **150,000.00**<br>**340,000.00** |
| | | **490,000.00** |

| | | |
|---|---|---|
| | **02 - Reality Show**<br>- ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 75,000.00 வீதம்<br>- வெளிநாட்டு உறுப்பினர் 230 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீதம் ) | **150,000.00**<br>**460,000.00**<br>**610,000.00** |
| | **02 - TV COMMERCIAL**<br>- - ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 50,000.00 வீதம்<br>- - வெளிநாட்டு உறுப்பினர் 45 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீதம் ) | **100,000.00**<br>**90,000.00**<br>**190,000.00** |
| | **02 - Photo Shoot**<br>- - ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 25,000.00 வீதம்<br>- - வெளிநாட்டு உறுப்பினர் 11 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீதம் ) | **50,000.00**<br>**22,000.00**<br>**72,000.00** |

**ஏனைய (விசேட சேவைகள்)**

I. திரைப்படக் கலைஞர்களுக்கும், பழைய திரைப்படங்களுக்கும் அடையாளத்தை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல்.

II. திரைப்படக் கலைஞர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

III. இலங்கை சுங்கத்திற்கு தடைநீக்கச் சான்றிதழ்களை வழங்குதல்.

IV. திரையரங்குகளுக்கு வரிச் சலுகை வழங்குவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்குதல்.

V. நாட்டில் படப்பிடிப்புச் செய்யப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்படங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கமெராக்கள் உள்ளிட்ட தொழில்நுட்ப உபகரணங்களுக்கு இலங்கை சுங்கத்திடம் உத்தரவாதம் பெற்று தடைநீக்கச் சான்றிதழ்களை வழங்குதல்.

VI. சினிமாக் கலைஞர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

VII. சினிமாக் கல்வியைப் பெறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சினிமாத் தகவல்களை வழங்குதல்.

VIII. திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரைப்படக் இறக்குமதிக்கான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் தேவையான தகவல்களை சமர்ப்பித்தல்.

IX. கூட்டுத்தாபனம் (ரித்மா) சபையின் கீழ் காட்சிக்காக வெளியிடப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்படங்களுக்கான விநியோக ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

X. ஊடகவியலாளர்களுக்கு திரைப்படங்களை கண்டு களிப்பதற்கான அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல்.

## 04. மனித வள மற்றும் நிர்வாக நடவடிக்கை

2022 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபன ஊழியர் குழு

| | |
|---|---|
| **2022.01.01 ஆந் திகதிக்கான ஆளணி** | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 186 |
| நிரந்தரப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 117 |
| | |
| **2022 வருடத்தில் வெளியேறிச் சென்றவர்களின் எண்ணிக்கை** | |
| ஓய்வு பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | 01 |
| சேவையில் இருந்து இராஜினாமாச் செய்த ஊழியர்களின் எண்ணிக்கை | 03 |
| | |
| 2022.12.31 ஆந் திகதிக்கான நிரந்தர ஆளணி | 113 |
| | |
| ஏனைய பணியாட் தொகுதினர் | |
| தலைவர் | 01 |
| | |
| 2022.12.31 மொத்த பணியாட்தொகுதியினர் | 114 |

### நிறுவனக் கட்டுப்பாடு மற்றும் பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

நிறுவனத்தின் பணியாளர் கட்டுப்பாடு தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறைகள் அப்படியே முன்கொண்டு செல்வதற்கு சேவை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 05. திரைப்பட விளம்பரம் / சினே அட்ஸ்

### 2022 ஆம் ஆண்டுக்கு உரித்தாக நிறைவேற்றப்படும் பணிகள் மற்றும் முன்னேற்றம்

பத்திரிகை விளம்பர நடவடிக்கைகளினால் கிடைத்த வருமானம் ரூபா. 15,988.30
விளம்பரப் பலகையை காட்சிப்படுத்தல் வருமானம் ரூபா. 304,500.00
ரூபா.320,488.30

### 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை திரைப்பட விளம்பரச் செலவுகள்

| செலுத்திய நிறுவனம் | தொகை (ரூபா.) |
|---|---|
| Wijeya News Paper Ltd | 9,782.20 |
| Wijeya News Paper Ltd | 24,976.03 |
| Wijeya News Paper Ltd | 3,965.76 |
| | **38,723.99** |

### 2022-01-01 ஆந் திகதி முதல் 2022-12-31 ஆந் திகதி வரை கூட்டுத்தாபன அறிவித்தலுக்கான செலவுகள்

| செலுத்திய நிறுவனம் | தொகை (ரூபா.) |
|---|---|
| The Associated News Papers of Ceylon Limited | 130,925.75 |
| | 105,019.20 |
| | 19,794.38 |
| | 102,989.40 |
| | **358,728.73** |

## 06. கல்வி மேம்பாடு மற்றும் கலாச்சார

❖ **திரைப்படவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி**

- 2021 ஆம் ஆண்டில் பாடநெறியின் கல்வி நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இந்த பாடநெறி கொவிட் தொற்று நோய் நிலை காரணமாக உரிய காலப்பகுதியினுள் நிறைவு செய்ய முடியவில்லை.
- இலங்கை சினிமா 75 வருட பூர்த்தியை முன்னிட்டு, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் சினிமா டிப்ளோமாவைப் பெற்று சர்வதேச சினிமா விழாவில் பாராட்டினையும் விருதுகளையும் பெறுவதற்கு 08 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்டது.
- சினிமா பாடநெறிக்காக பயன்படுத்துவதற்கு SONY A7 R iii ஒரு கெமராவை கொள்வனவு செய்தல்.

❖ **சினிமாத் திரைக்கதைக்கான சான்றிதழ் பத்திர பாடநெறி - 2023 இல் திட்டமிடல்.**

- இப்பாட நெறிக்கு விசேட குழுவொன்றின் மூலம் விடயப் பரிந்துரை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2023இன் இரண்டாம் காலாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

❖ **திரைப்பட வெளியீடுகளை வழங்குதல்.**



- சினிமாச் சஞ்சிகை 2022 ஆண்டுக்கான பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 500 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது. அவற்றில் 495 பிரதிகள் சமூகமயமாக்கப்பட்டுள்ளது. (விற்பனை மற்றும் விசேட நன்கொடைகளின் கீழ்)
- சினிமா வெளியீடுகள் செயற்திட்டத்தின் கீழ் சினிமா புத்தகங்கள் இரண்டு அச்சிடப்பட்டு மக்கள் மயமாக்கப்பட்டுள்ளது.





1. பின்நவீனத்துவ சினிமாப் புத்தகம் - பிரபாத் அகம்பொடி
2. சிங்களே மகா சினிமா வங்சய 2 - ஆதர் யூ அமரசேன

❖ **சினிமாப் ரசிகர்களை ஊக்குவிக்கும் செயலமர்வுகளை நடாத்துதல். (மாவட்டங்களை மையப்படுத்தி)**

1. பதுளை ஊவா மாகாண நூலக கேட்போர் கூடம் - 250 கட்புல ஆசிரியர்களின் பங்கேற்புடன். 2022.03.23



2. பண்டாரவெல நகர மண்டபம் - 250 கட்புல ஆசிரியர்களின் பங்கேற்புடன் (2022.03.24)

3. பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி, கொழும்பு 02, 400 ஆசிரியர்களின் பங்கேற்புடன் சினிமா பொழுதுபோக்குச் செயலமர்வு - பெத்தேகம திரைப்படக் காட்சி - 2022.11.22

❖ **சினிமா நூலகம்**

சினிமா நூலகத்தை முறைசார்ந்த வகையில் நிறுவி பயன்படுத்த முடியுமான வகையில் தயாரித்தல்.

❖ **சினிமா வெளியீடுகள் விற்பனை**

ரூபா. 306,395.00 இனைக் கொண் வருமானத்துடன் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. (புத்தகங்களினால், பல்வேறு வெளிவாரித் திட்டங்கள், சர்வதேச புத்தக கண்காட்சியினை மையமாகக் கொண்டு)





## 07. திரைப்பட விநியோகம்

### 1. திரைப்படக் காட்சிப்படுத்தல்

❖ 2022 ஆம் ஆண்டினுள் ரித்மா சபையின் 65 திரையரங்குகள் செயற்பட்டன.

### 2. திரைப்படங்களை விடுவித்தல்

❖ திரையரங்குகள் 42 இனை ரித்மா சபையினால் திரையிடலிற்காக விடுவிக்கப்பட்டுள்ளன.

❖ 2022 ஆம் ஆண்டினுள் ரித்மா சபை மற்றும் ஏனைய சபைகளுடன் கூட்டிணைந்து திரைப்படங்களை காட்சிக்காக விடுவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

❖ ரித்மா சபையினால் 05 சிங்கள திரைப்படங்கள் காட்சிக்காக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

❖ இவ்வருடம் சனவரி மாதம் முதல் வழங்குநர்களின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட 03 தமிழ்த் திரைப்படங்கள் மற்றும் 04 ஹிந்தித் திரைப்படங்கள் ரித்மா சபையினாலும் மற்றைய சபை திரையரங்களில் மற்றும் கூட்டிணைந்த வீ ரித்மா சபையினால் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கில் இருந்து (கோட்டா) திரைப்படங்களைப் பெற்று ரித்மா சபையின் முலம் காட்சிப்பட்டுத்த விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.)

### 3. திரைப்பட வாடகை

ரித்மா சபையினால் பிற சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள திரைப்படங்களுக்கு கிடைக்கப்பெற்றுளள திரைப்பட வாடகைத் தொகை

| | | ரூபா |
|---|---|---|
| லங்கா செல்ம்ஸ் டிஸ்டிரிபியுடர்ஸ் கம்பெனி (தனி) நிறுவனம் | = | 215,801.12 |
| ஈ.ஏ.பி. பில்ம்ஸ் அன்ட் இம்போடர்ஸ் (தனி) நிறுவனம் | = | 569,557.92 |
| சினமா இன்டர்டேன்மன்ட் (தனி) நிறுவனம் | = | 247,708.58 |

ரித்மா சபையிள் திரையரங்குகள் மற்றைய சபைகளிடமிருந்து பெற்றுக் கொண்ட திரைப்படங்களுக்காக பின்வருமாறு பணம் செலுத்தப்பட்டுள்ளது.

| | | ரூபா |
|---|---|---|
| லங்கா பில்ம்ஸ் டிஸ்டிரிபியுடர்ஸ் கம்பெனி (தனி) நிறுவனம் | =. | 10,421,394.46 |
| ஈ.ஏ.பி. பில்ம்ஸ் அன்ட் இம்போடர்ஸ் (தனி) நிறுவனம் | = | 5,454,039.76 |
| சினமா இன்டர்டேன்மன்ட் (தனி) நிறுவனம் | = | 2,774,725.51 |

## 08. உள்நாட்டு வழங்கல்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

1. E - Ticketing திட்டத்திற்கு உரித்தாக விலை மனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டு திட்டத்தை ஆரம்பித்தல்.
2. சரசவி கலையகத்திற்கு மற்றும் பிரதான அலுவலகத்திற்குரிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சேவைகளைப் பெறுதல் மற்றும் இற்றைப்படுத்துவதற்குரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தேவைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அலுவலக காகிதாதிகள் மற்றும் உபகரணங்களை உரிய முறையின் கீழ் கொள்வனவு செய்து வழங்குதல்.

4. திரையரங்குகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தேவைகளுக்கு ஏற்ப அச்சிடல் நடவடிக்கைகளுக்கு உரித்தான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. குறித்த முகவர் நிறுவனங்களுடன் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு உரித்தான சேவை ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தி பேணிச் செல்லல்.
6. வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் வாகனங்களைக் காப்புறுதி செய்வதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.
7. கூட்டுத்தாபனத் தேவைப்பாடுகளின் படி தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் கட்டிட பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
8. கூட்டுத்தாபனத்தின் சகல விற்பனைகளுக்கும் குறித்த விற்பனை விவரப் பட்டியலை வழங்குதல்

## 9. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

1971 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய 2022 ஆம் வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிவுறுத்தலின் படி தயாரிக்கப்பட்டுள்ளது.

வருடத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 1 தடவை நடத்தப்பட்டுள்ளது. (2022/12/15)

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

| பெயர் | பதவி |
|---|---|
| திரு. பி.பி. எஸ்.ஆர். த சில்வா | குழுத் தலைவர் ( திறைசேரிப் பிரதிநிதி) |
| திரு. நளின் குமார நிஷ்ஷங்க | குழு உறுப்பினர் |
| திருமதி. நதீகா குணசேகர | குழு உறுப்பினர் |
| திரு. எம்.கே. ஜயசேகர | கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம் |
| திருமதி. நிமாலி ஜயசிங்ஹ | பிரதான உள்ளக கணக்காய்வாளர் - வெகுசன ஊடக அமைச்சு |

# 10. நிதி நடவடிக்கைகள்

## 01. வருமான மூலங்கள்

2021-2022 ஆம் ஆண்டுகளில் உண்மையான வருமானம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் பாதீட்டு வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| வருமானம் | 2021 உண்மையான ( ரூபா. மில். ) | 2022 உண்மையான ரூபா. மி. | குறைதல்/ அதிகரித்தல் (%) | 2022 பாதீட்டு ரூபா. மி. |
|---|---|---|---|---|
| விநியோகக் கழிவுகள் - உள்நாட்டு | 1.8 | 8.3 | 361.1 | 20 |
| வெளிநாட்டு | 12 | 38.6 | 221.6 | |
| அதிகரித்தல் ( கூட்டுத்தபான நம்பிக்கை நிதியம்) | 2.1 | 6.6 | 214.3 | 4.5 |
| மேலதிகக்கட்டண விசாரணை அபராதத் தொகை மற்றும் பிற | 1.1 | 1.5 | 36.4 | 1.3 |
| சினே அட்ஸ் கழிவுகள் | 0.1 | 0.01 | (90.0) | 0.5 |
| கலையகத்தின் வருமானம் | 0.5 | 2.5 | 400.0 | 2.5 |
| வர்த்தக நடவடிக்கைகள் | 0.7 | 1.8 | 157.1 | 1.1 |
| **செயற்பாட்டு வருமானங்கள்** | **18.3** | **59.3** | **224.1** | **29.9** |
| **ஏனைய வருமானங்கள்** | **48.7** | **91.9** | **88.7** | **75.1** |
| **திறைசேரியிலிருந்து - ஜனாதிபதி விருது வழங்கும் விழாவிற்கு** | **0** | **0** | **0** | **0** |
| **மீண்டுவரும் செலவினங்களுக்கான கிடைப்பனவுகள்** | **100** | **97.4** | **(2.6)** | **97.5** |
| **மொத்த வரவுகள்** | **167** | **248.6** | **48.9** | **202.5** |

2021 ஆம் ஆண்டுன் ஒப்பிடும் போது செயற்பாட்டு வருமானம் 2022 ஆம் ஆண்டில் 2021 ஆம் ஆண்டினை விட 224.1% இனால் அதிகரிப்பைக் காட்டுகின்றது. உள்நாட்டு விநியோகக் கழிவுகள் 361.1% இனாலும், வெளிநாட்டு விநியோகக் கழிவுகள் 221.6% இனாலும் அதிகரித்துள்ளமை செயற்பாட்டு வருமானம் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைகின்றது.

## 02. <u>செலவுக்கான மூலங்கள்</u>

2021, 2022 ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவுகள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் பாதீட்டு வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| **செலவுகள்** | **2021 உண்மையான ரூபா. மி.** | **2022 உண்மையான ரூபா. மி.** | **குறைதல் / அதிகரித்தல் (%)** | **2022 பாதீட்டு ரூபா. மி.** |
|---|---|---|---|---|
| பணியாளர் ஊதியம் | 89.5 | 88.8 | (0.8) | 97.5 |
| பயண மற்றும் பிழைப்பூதியப் படி | 0.4 | 0.4 | 0.0 | 0.3 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 5.6 | 2.8 | (50.0) | 8.4 |
| வாகனங்களைப் பழுதுபார்த்தலும் பராமரிப்புச் செய்தலும் | 25.3 | 4.7 | 25.7 | 4.7 |
| மதிப்பிறக்கம் | | 27.1 | | |
| தேசிய திரைப்பட விழா | 0 | 35 | 0.0 | 0 |
| விற்பனைச் செலவுகள் | 0.7 | 1.2 | 71.4 | 3.3 |
| போக்குவரத்து தொடர்புகள், தேவைகள் மற்றும் பிற | 21.6 | 28.6 | 32.4 | 63.8 |
| அறவிட முடியாக் கடன்களை ஒதுக்குதல் | 1.6 | 19.4 | 1112.5 | 17.3 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 2.4 | 2 | (16.7) | 5.3 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நிதியம் | 10.5 | 8 | (23.8) | 0.5 |
| **மொத்தச் செலவு** | **157.6** | **218** | **38.3** | **201.1** |

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டின் செலவுகள் 38.3% இனால் அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், 2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதி விருது வழங்கும் விழாவிற்கு 35 மில்லியன் ரூபாவும் சந்தேகத்திற்கிடமான கடனுமாக ஒதுக்கப்பட்டு 19.4 மில்லியன் ரூபா வரை அதிகரித்தமையாகும்.

| | 2021<br>ரூபா. மில். | 2022<br>ரூபா.மில். | % |
|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | 18.3 | 59.3 | 224.1 |
| **<u>குறைக்கப்பட்டது</u>** | | | |
| செயற்பாட்டு செலவு | (157.6) | (218) | 38.3 |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | (139.3) | (158.735.2) | 13.9 |
| **<u>சேர்க்கப்பட்டது</u>** | | | |
| இதர வருமானம் | 48.7 | 91.9 | 88.7 |
| வருடத்தின் இலாபம் / நட்டம் | (90.6) | (66.8) | (26.3) |
| **<u>சேர்க்கப்பட்டது</u>** | | | |
| திறைசேரியிலிருந்து - ஜனாதிபதி விருது வழங்கும் விழாவிற்கு மீண்டுவரும் செலவுகளுக்கு மற்றும் | 100 | 97.4 | (2.6) |
| **மிகை** | 9.4 | 30.6 | (225.5) |

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நட்டம் 26.3% இனால் குறைவடைந்துள்ளது. திறைசேரியிலிருந்து மீண்டுவரும் செலவினங்களுக்கான கிடைப்பனவுகள் சரிசெய்த பிறகு, அது 225.5% இனால் மிகையைக் காட்டுகின்றது.

**<u>நிலையான சொத்துக்கள்</u>**

2022 ஆம் ஆண்டில் சரசவி கலையத்திற்காக ஒலி ஊடருவி கருவியொன்றினை கொள்வனவு செய்வதற்காக ரூபா. 205,900.00ஆன தொகையும்,E-Ticketingமென்பொருளுக்காக ரூபா. 3.3 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் திரைப்படக் கூலி கூட்டுத்தாபன நிதியம் (ரித்மா) கணனி நிகழ்ச்சித்திட்ட அமைப்பில் டோஸ் அடிப்படை அமைப்பின் வின்டோஸ் இனை நிறுவுவதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 2022 ஆம் ஆண்டில் சொத்தாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா. 215,000.00 உம் 2022 ஆம் ஆண்டில் ரூபா. 107,500.00 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>நடப்புச் சொத்துக்கள்</u>**

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நடப்புச் சொத்துக்கள் ரூபா. 232 மில்லியனால் அதிகரித்திருந்தது.

**நடப்புப் பொறுப்புக்கள்**

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் திரைப்படக் கூலி கடன் வழங்குநர்கள் அதிகரித்ததன் காரணமாக 126.5 மில்லியன் ரூபாவினால் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துள்ளது.

## 11. சட்டப் பிரிவு

2022 ஆம் ஆண்டில் சட்டத்துறையால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாக அமைந்த வழக்குகள் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாள் கோப்பிடல் மற்றும் குறித்த நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தோற்றுதல்.
- தொழில் திணைக்களத்திற்கு முன்னிலையில் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தோற்றுதல்.
- உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பு மற்றும் விநியோகம், இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களை விநியோகித்தல் தொடர்பாக மற்றும் திரைப்படத் தயாரிப்புக்கள் / கலையகச் சேவைகள் / பிரதிகளை அச்சிடல் / திரையரங்குகளுக்கான கடன் தொகைகளை வழங்குதல் மற்றும் சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட சகல சட்டரீதியான ஒப்பந்தங்களையும் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடல்.
- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு ஆதரவு வழங்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பிற நடவடிக்கைகள் தொடர்பாக சகல சட்டரீதியான ஒப்பந்தங்களையும் தயாரித்தல் மற்றும் கைச்சாத்திடல்.
- அன்றாட தேவைகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவிற்கும் அனுப்பப்படும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கான ஆலோனைகளை வழங்குதல்.

## 12. கலையகச் சேவைகளை வழங்குதல்

பிந்தைய தயாரிப்புக் கட்டத்தில் காணப்படுகின்ற திரைப்படங்களுக்காக தொழில்நுட்பச் சேவை மற்றும் வசதி வாய்ப்புக்களை வழங்குதல் என்பன தலுகம சரசவி கலையகத்தின் பிரதான பணியாகும்.

இவ்வருடத்திலும் கலையத்தின் பின்வரும் பிரிவுகளின் முலம் உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. ஒலிப் பிரிவு (Digital)
2. ஒளிக்கீற்று பாதுகாப்புப் பிரிவு (Digital)
3. பாதுகாப்புப் பிரிவு (Analogue)
4. பிந்தைய தயாரிப்பு உபகரணங்களின் காப்பகம்
5. திரைப்படக் காப்பகம்
6. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி படப்பிடிப்புக் கலையகம்

| | | |
|---|---|---|
| ஒலிப் பிரிவு | - திரைப்படங்களின் எண்ணிக்கை 20 வருமானம் ரூபா. | 1.785,568.25 |
| படத் தொகுப்புப் பிரிவு | - திரைப்படங்களின் எண்ணிக்கை 05 வருமானம் ரூபா. | 280,025.00 |
| படப் பிடிப்பு | - திரைப்படங்களின் எண்ணிக்கை 12 வருமானம் ரூபா. | 639,518.07 |
| | வருமானம் ரூபா. | **2,705,111.32** |

## காப்பகம்

பழைய காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த திரைப்படச் சுருள்களைச் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முழுமையற்ற சுமார் 25 திரைப்படங்கள் இரசாயனங்களால் சுத்தம் செய்யப்பட்டு புதிய பிளாஸ்டிக் கொள்கலன்களில் வைக்கப்பட்டு காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

Cine Post Archive நூதனசாலையில் புதுப்பிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஏனைய பணிகள்

1.2022 ஜனவரி மாதம் 21 ஆந் திகதிக்கு அமைந்திருந்த இலங்கை சினிமாவின் 75 வது ஆண்டு மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 50 வது ஆண்டு நிறைவை ஒட்டி, சரசவி கலையகத்தின் கருப்பு மற்றும் வெள்ளை இரசாயனக் கூட வளாகத்தில் Cine Post Archive என்ற பெயரில் ஏராளமான சினிமா அருங்காட்சிப் பொருட்களைக் கொண்டு அருங்காட்சியகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2.கலையகத்தின் ஒப்பனைக் கூடம் முன்னைய ஆண்டில் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கும் மதிப்பீட்டிற்கும் ஏற்ப நிர்மாணிப்புப் பகுதியை மாத்திரம் மேற்கொண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

3.கலையகத்தின் பிரதான கட்டிடத்தின் மேல் தளத்தில் இரண்டு அலுவலகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வேறுபடுத்தும் கட்டுமானப் பணி இடம்பெற்றுள்ளது.

4.பாதுகாப்புப் பிரிவினால் பிரித்து வேறுபடுத்தப்பட்ட கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளது.

5.கலையக ஊழியர்களின் பங்களிப்புடன் நவீனமயமாக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் மற்றும் Folly Sound பதிவிடல் கூடம் திறக்கப்பட்டுள்ளது.

## 13. புலனாய்வு நடவடிக்கைகள்

### 2022 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

1. திரையரங்குகளை பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் முறைகேடுகளுக்கு குற்றப்பத்திரங்களை வழங்குதல்.
2. சினிமா திரையரங்குகளை நிர்மாணிப்பதற்காக காணி கட்டடங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல்.
3. புதிய திரையரங்குகளை திறந்து வைத்தல் மற்றும் மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீள திறந்து வைத்தல்.
4. வெளிநாடு படப் பிடிப்புக்களை மேற்பார்வையிடல்.
5. திரையரங்குகளுக்கான மதுபான உரிமங்களை வழங்குவதற்காக தடைநீக்கச் சான்றிதழ்களை வழங்குதல்.
6. 2022.09.27 ஆந் திகதி நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள திரையரங்குகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய பழைய நிலுவைத் தொகைகளை அறவிட்டுக் கொள்ளல்.
7. திரையரங்குகளின் தரத்தினை கண்டறிந்து நுழைவு அனுமதிக் கட்டணங்களை திருத்துவதற்கான பரிந்துரைகள் வழங்குதல்.

01. திரையரங்குகளை பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் முறைகேடுகளுக்கு குற்றப்பத்திரங்களை வழங்குதல்.

01- (அ) திரையரங்குகளை பரீட்சித்தல்.

திரையரங்குகளை பரிசோதனை செய்து பார்ப்பதே பரீட்சிப்புப் பிரிவின் முக்கியப் பணியாகக் காணப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் 705 தடவைகள் பரிசோதனைகள் இடம்பெற்றன.

(ஆ)திரையரங்குகளில் இடம்பெறும் முறைகேடுகளுக்கு குற்றப்பத்திரங்களை வழங்குதல்.

திரையரங்குகளில் சோதனை நடத்தியதில் முறைகேடுகளை விசாரணை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். அதற்காக கூட்டுத்தாபன சுற்றறிக்கையின்படி பணிபுரிந்து 2022ஆம் ஆண்டு ரூபா. 119,800.00 மதிப்புடைய 24 பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ரூபா. 81,500.00 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளது.

02. சினிமா திரையரங்குகளை நிர்மாணிப்பதற்காக காணி கட்டடங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல்.

திரையரங்களை நிர்மாணிப்பது தொடர்பில் தகவல்களை சேகரிப்பதற்காக சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிரதேச சபைகளுக்கு திரையரங்குகளை நிர்மாணிப்பது குறித்த தகவல்களை விசாரித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தின் படி உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து, பல்வேறு தகவல்கள் திரையரங்குகளை நிர்மாணிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்தன. அது குறித்த தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

**நிர்மாணிக்கப்படும் திரையரங்குகள்**

அதன்படி, புலனாய்வுப் பிரிவின் தலையீட்டுடன் தற்சமயம் ஒரு திரையரங்கு நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு மூடப்பட்டிருந்த திரையரங்கொன்றினை திறந்து வைக்கும் நிகழ்வு 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

**மினுவன்கொடை உத்தேசிக்கப்பட்ட திரையரங்கு**

இந்த திரையரங்கு கட்டிடத் தொகுதி மினுவன்கொடை நகரத்தில் கல்ஒலுவ பிரதேசத்தில் மூன்று மாடிக் கட்டிடத்தைக் கொண்ட கட்டிடத்தில் மூன்றாம் மாடியில் அமைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டிறுதியில் அப்பணிகளில் சுமார் 75% ஆன வேலை நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

தற்போது, இந்த கட்டிடத்தின் கூரை தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, திரையரங்கிற்கு தேவையான புறத்தெறிவு இயந்திரம் மற்றும் ஒலி அமைப்பிற்காக உரிய மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. இந்த உபகரணங்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான ஆரம்ப கட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



03. புதிய திரையரங்குகளை திறந்து வைத்தல் மற்றும் மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீள திறந்து வைத்தல்.

மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீள திறந்து வைத்தல்.

**சங்ககாவி - பேசாலை**

இந்த திரையரங்கு பேசாலை நகரத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. முன்னர் இருந்த பவுலிக் திரையரங்கு ( 2001 ஆம் ஆண்டில்) சங்ககாவி என்ற பெயரில் மாற்றப்பட்டு இந்த இடம் முழுமையாக பழுதுபார்க்கப்பட்டு புதிய முகாமைத்துவத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலிருந்து 18km அளவிலான தூரத்தில் தலை மன்னார் நகரத்திற்கு கிட்டியதாக அமைந்துள்ளது.






04. வெளிநாடு படப் பிடிப்புக்களை மேற்பார்வையிடல்

இப்பிரிவு இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களினால் மேற்கொள்ளப்படும் வர்த்தக விளம்பரங்கள், திரைப்படங்கள் மற்றும் ஆவண நிகழ்ச்சித்திட்டங்களை படப்பிடிப்பு செய்வதனை மேற்பார்வை செய்கின்றது. அதன்படி, 2022 ஆம் ஆண்டினுள் 40 வெளிநாட்டு படப்பிடிப்புக்கள் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளன.

05. திரையரங்குகளுக்கான மதுபான உரிமங்களை வழங்குவதற்காக 23 தடைநீக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

06.திரையரங்குகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய பழைய நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்ளல்

2022.09.27 ஆந் திகதிக்கு திரையரங்குகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் புலனாய்வுப் பிரிவினால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் மூலம் அறவிடப்பட்ட நிலுவைத் தொகை ரூபா. 5,652,085.73/- ஆகும்.

## 14. திட்டங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் பயிற்சிகள்

**இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.**

- நிறுவனக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு அவசியப்படும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தாயரித்தல் மற்றும் முன்னேற்றங்களை மேற்பார்வையிடல்
- ஆண்டறிக்கையைத் தயாரித்தல்
- மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்றங்களை நிரல் அமைச்சுக்கள் மற்றும் குறித்த நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- பணியாட்தொகுதியினரின் பயிற்சித் தேவைகளை கண்டறிதல் மற்றும் வருடாந்த பயிற்சித் திட்டங்களை தயாரித்தல்.
- கூட்டுத்தாபனத்துக்குரிய வர்த்தமானி அறிவித்தல், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய புள்ளிவிபரவியல் தரவுகள் என்பனவற்றை திரட்டி கணனித் தரவுத் தளத்தை பேணிச் செல்லல்.

## 15. வைத்திய உதவித் திட்டம்

அங்கத்துவத் தொகை மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் தொகையின் அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் வைத்திய உதவித் திட்டம் இவ்வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன் நிர்வாகக் குழு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- திருமதி. கயனி முணவீர - ப. க. பிரதி பொது முகாமையாளர் நிதி (குழு தலைவர்) 2022.04.29 வரை
- திரு. துனில் ஹெய்யன்துடுவ - ப. க. பிரதி பொது முகாமையாளர் - நிதி (குழு தலைவர்) 2022.10.26 ஆந் திகதி முதல்
- திரு. அசங்க குணதிலக - நிர்வாக உத்தியோகத்தர் - நிர்வாக மற்றும் மனித வளம்
- திரு. கே. ஆர். வின்சன் - குழு உறுப்பினர்
- திரு. சுகித இலங்ககோன் - குழு உறுப்பினர்

## 16. நலன்புரிச் சங்கம்

கூட்டுத்தாபன நலன்புரிச் சங்கத்தினால் மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஊழியர் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- 2022.11.10 ஆந் திகதி சங்கத்தின் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டு புதிய உத்தியோகத்தர் குழுவொன்று நியமித்துக் கொள்ளல்.
- இதுவரை காணப்பட்ட அங்கத்துவ மரணச் சடங்குக் கொடுப்பனவு 25,000 தொடக்கம் 100,000 வரை அதிகரித்தல்.
- அங்கத்தவரின் கீழ் தங்கிவாழும் ஒருவரின் மரணச் சடங்குக் கொடுப்பனவு 25,000 தொடக்கம் 50,000 வரை அதிகரித்தல்.
- 07 வருடங்களின் பின்னர் கூட்டுத்தாபன சிற்றுண்டிச்சாலையை திறந்த வைத்தல்.
- அங்கத்துவ கடனைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சிக்கலான கடன் விண்ணப்பத்தை எளிதாக்குதல் மற்றும் 15 வருட சேவைக் காலத்துடன் ஊழியர்களின் கடனிற்கான பிணையை இரத்துச் செய்தல்.
- முழுமையான மரணச் சடங்குக் கொடுப்பனவைப் பெறுவதற்குள்ள தடையை நீக்குதல்.
- மில்கோ பால் சார்ந்த உற்பத்தி விற்பனை நிலையமொன்றை கூட்டுத்தாபனத்திற்கு முன் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 17. பௌத்த சங்கம்

பௌத்த சங்கத்தினால் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கூட்டுத்தாபனம் 50ஆம் ஆண்டுவிழாவிற்கு இணையாக ஊழியர்களுக்கும் திரைப்படத் துறையுடன் தொடர்புடைய அனைவருக்கும் ஆசிர்வாதிக்கும் வகையில் பிரித் பின்கமவொன்றினை நடத்துதல்.
- கூட்டுத்தாபன ஊழியர்களின் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு அவசியப்படும் புத்தகங்களை வழங்குதல்
- 2022.01.01 ஆந் திகதி கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஆசிர்வாத போதி பூஜை பின்கம் ஒன்றினை நடத்துதல்.

## 18. விளையாட்டுச் சங்கம்

இவ்வருடத்தினுள் விளையாட்டுச் சங்கம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, கோவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதில் தடையேற்பட்டுள்ளது.

## 19. தொழிற் சங்கம்

தேசிய ஊழியர் சங்கம், இலங்கை சுதந்திர ஊழியர் சங்கம், திரைப்படக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் மற்றும் வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவை முற்போக்கு ஊழியர் சங்கம் இவ்வருடத்தினுள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 20. நன்றி

2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமான அடைவுகளை பெற்றுக்கொள்வதற்காக அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் மற்றும் ஊக்கத்துடனும் கூட்டுத்தாபன ஊழியர்கள் சேவைகளை நிறைவேற்றியுள்ளார்கள்.

அச்சேவைகளை பணிப்பாளர் சபை பெருமனதுடன் பாராட்டுவதோடு அவர்களுக்கு தனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜீ. ஏ. கித்சிரி
பொது முகாமையாளர்
இலங்கை தேசிய திரைப்படக்
கூட்டுத்தாபனம்

ஒப்பம் - சட்டத்தரணி தீபால் ஷந்திரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக்
கூட்டுத்தாபனம்

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# நிதி அறிக்கை

## 2022

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2022.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**
**விரிவான வருமானக் கூற்று**

| விபரம் | குறிப்பு | | 2022 ரூபா' | 2021 ரூபா' |
|---|---|---|---|---|
| **விற்பனை** | **03** | | 59,383,861 | 18,380,381 |
| குறைக்கப்பட்டது - விற்பனைச் செலவு | **04** | | (1,158,212) | (689,481) |
| மொத்த இலாபம் | | | 58,225,649 | 17,690,900 |
| குறைக்கப்பட்டது - செலவு | | | | |
| பணியாளர்களின் ஊதியம் | **05** | | (88,750,498) | (89,509,572) |
| பிரயாண மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு | **06** | | (427,865) | (428,361) |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | **07** | | (2,843,434.89) | (5,637,331) |
| பழுதுபார்ப்பு, பராமரிப்புகள் மற்றும் தேய்மானம் | **08** | | (4,726,876) | (25,275,202) |
| தேய்மானம் | **08A** | | (27,141,801) | - |
| போக்குவரத்து, இணைப்புகள், கோரிக்கைகள் மற்றும் பிற சேவைகள் | **09** | | (28,642,201) | (21,555,276) |
| ஜனாதிபதி சினிமா விழாவிற்கான ஒதுக்கீடு | **09A** | | (35,000,000) | - |
| அறவிடப்பட முடியாக் கடன்களுக்கான ஒதுக்கீடு | **16-A** | | (19,414,395) | (1,627,943) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | **20** | | (2,009,657) | (2,443,174) |
| சினிமாக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நிதிக்கான பங்களிப்புகள் | | | (8,000,000) | (10,500,000) |
| | | | (216,956,727) | (156,976,860) |
| செயல்பாட்டு இலாபம் / நட்டம் | | | (158,731,078) | (139,285,960) |
| சேர்க்கப்பட்டது : | | | | |
| பிற வருமானம் | **10** | 7,641,644 | | |
| நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி | | 54,115,725 | | |
| திறைசேரியிலிருந்து வருமானத்திற்கான ரசீதுகளை இனங்காணல் | | 15,713,792 | | |
| 224 கட்டிடங்களின் வாடகை | | 8,839,000 | | |
| கலையகத்தில் வெளியாட்களின் படப்பிடிப்புகள் | | 2,358,518 | | |
| வெளிநாட்டு ஆவணப் படங்களுக்கான அனுமதி | | 3,256,000 | | |
| | | | 91,924,679 | 48,703,513 |
| ஆண்டின் இலாபம் / நட்டம் | | | (66,806,399) | (90,582,447) |
| சேர்க்கப்பட்டது :திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற ரசீதுகள் | | | 97,495,000 | 100,000,000 |
| வரிக்கு முன்னைய இலாபம் | | | 30,688,601 | 9,417,553 |
| குறைக்கப்பட்டது - வரிகளுக்கான ஒதுக்கீடு | | | | |
| பற்றாக்குறை / மிகை | | . | 30,688,601 | 9,417,553 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2022.12.31 ஆந் திகதிக்கான**
**நிதி நிலை அறிக்கை**

| | குறிப்பு | 2022 ரூபா' | 2021 ரூபா' |
|---|---|---|---|
| பிரதிநிதித்துவம் வகிப்பது | | | |
| நிலையான சொத்துக்கள் | | | |
| சொத்து" இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 11 | 366,257,801.24 | 341,996,821.06 |
| புலனாகாத சொத்துக்கள் (தேய்மானம் குறைக்கப்பட்டதன் பின்) | 11A | 1,194,229.60 | 1,691,619.60 |
| நீண்ட கால முதலீடு | 12 | 141,814,000.00 | 196,022,797.74 |
| ஊழியர் கடன் | 16-1 | 17,804,372.84 | 16,506,774.81 |
| | | 527,070,403.68 | 556,218,013.21 |
| நடப்புச் சொத்துக்கள் | | | |
| குறுகிய கால முதலீடுகள் ( 06 மாதங்களுக்கான) | 13 | 82,619,991.10 | 106,850,577.29 |
| பங்குகள் | 14 | 7,181,945.20 | 7,535,415.53 |
| கிடைக்க வேண்டிய திரையரங்குகளின் கடன் | 15A | 126,592,045.10 | 118,441,907.28 |
| தயாரிப்புக் கடன் | 15B | 10,477,258.68 | |
| நானாவித கடனாளிகள் | 16 | 258,758,538.43 | 191,404,901.31 |
| வைப்புகள் மற்றும் முன் செலுத்துகை | 17 | 4,499,159.63 | 3,359,151.66 |
| பணம், வங்கி நிலுவை" 03 மாதங்களுக்கான குறுகியகால் முதலீடு | 18 | 230,681,670.45 | 57,523,461.69 |
| | | 720,810,608.59 | 485,115,414.76 |
| மொத்த சொத்துக்கள் | | 1,247,881,012.27 | 1,041,333,427.97 |
| பயன்படுத்தப்பட்ட மூலதனம் | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் **(பக்க இலக்கம்- 03)** | | 10,000,000.00 | 10,000,000.00 |
| திரட்டப்பட்ட இலாபம் **(பக்க இலக்கம்- 03)** | | 475,908,546.15 | 441,170,246.92 |
| ஒதுக்கம் **(பக்க இலக்கம்- 03)** | | 160,732,759.11 | 134,282,759.11 |
| | | 646,641,305.26 | 585,453,006.03 |
| நடப்பற்ற பொறுப்புகள் | | | |
| மானியங்கள் | 19 | 112,617,552.62 | 89,894,344.61 |
| பணிக்கொடையிலிருந்து ஒதுக்கீடுகள் | 20-1 | 44,214,793.50 | 48,057,986.50 |
| | | 156,832,346.12 | 137,952,331.11 |
| சேர்க்கப்பட்டது ( நடப்புப் பொறுப்புகள் | | | |
| பணிக்கொடை ஒதுக்கீடு ( அடுத்த வருடத்திற்கு) | 20-2 | 4,719,990.00 | 944,610.00 |
| வைப்புகள் | 21 | 3,049,498.81 | 3,039,498.81 |
| திரைப்பட வாடகை கடன்வழங்குநர்கள் | 22 | 312,234,007.44 | 244,990,973.88 |
| நிதிப் பொறுப்புகள் | 23 | 44,917,712.50 | 53,565,690.23 |
| பிற கடன்வழங்குநர்கள் | 24 | 77,095,286.94 | 13,018,452.71 |
| செலுத்தப்பட வேண்டிய வரித்தொகை | 24 | 190,865.20 | 190,865.20 |
| கணக்காய்வுக் கட்டணங்களை ஒதுக்குதல் | 24 | 2,200,000.00 | 2,178,000.00 |
| | | 444,407,360.89 | 317,928,090.83 |
| மொத்த பொறுப்புகள் | | 1,247,881,012.27 | 1,041,333,427.97 |

-

பக்க இலக்கம் 05 முதல் 24 வரையிலான கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 25 முதல் 39 வரையிலான கணக்குகளுக்கான குறிப்புகள் நிதிநிலை அறிக்கையின் இன்றியமையாத பகுதியாகும். நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பை பணிப்பார் சபை கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் சார்பில், இந்த நிதிநிலை அறிக்கைகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதற்கு பின்வரும் கைொப்பங்கள் இடப்பட்டுள்ளன.

| …………………. | …………………… | ……………….. |
|---|---|---|
| பிரதீப் லங்கா தர்மவிக்கிரம | பி.எம். தீபால் | ஷந்திர்ரத்ன |
| பிரதிப் பொது முகாமையாளர் - நிதி | தலைவர் | பணிப்பாளர் |
| 2023.03.16 | | |

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
303, பௌத்தாலோக மாவத்தை
கொழும்பு 07

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2022.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## பங்கு மாற்றத்திற்கான அறிக்கை

| | சமபங்கு மூலதனம் ரூபா. | திரட்டிய இலாபம் ரூபா. | மூலதன இருப்பு ரூபா. | மறுமதிப்பீட்டு இருப்பு ரூபா. | பிற இருப்பு ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| **2021.01.01 இற்கான நிலுவை** | 10,000,000.00 | 431,752,693.48 | 499,898.45 | 125,953,399.00 | 7,829,461.66 | 576,035,452.59 |
| ஆண்டின் இலாபம் | - | 9,417,553.44 | - | - | - | 9,417,553.44 |
| | | | | | | - |
| கடந்த ஆண்டிற்கான சரிசெய்தல் (குறிப்பு | | 4,049,698.70 | | | | 4,049,698.70 |
| **2021.12.31 ஆந் திகதிக்கு நிலுவை** | 10,000,000.00 | 445,219,945.62 | 499,898.45 | 125,953,399.00 | 7,829,461.66 | 589,502,704.73 |
| மோட்டார் வாகன மறுமதிப்பீடு | - | - | - | 26,450,000.00 | - | 26,450,000.00 |
| ஆண்டின் இலாபம் | - | 30,688,600.53 | - | - | - | 30,688,600.53 |
| **2021.12.31 ஆந் திகதிக்கு நிலுவை** | **10,000,000.00** | **475,908,546.15** | **499,898.45** | **152,403,399.00** | **7,829,461.66** | **646,641,305.26** |

**இருப்பு**

| | |
|---|---|
| மூலதன இருப்பு | 499,898 |
| மறுமதிப்பீட்டு இருப்பு | 152,403,399 |
| இதர இருப்பு | 7,829,462 |
| | **160,732,759** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

**2022.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**

**காசுப் பாய்ச்சல் அறிக்கை**

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட பணம்** | | ரூபா' | ரூபா' |
| வரி விலக்குக்கு முன் தேறிய இலாபம் | | (66,806,399) | (90,582,447) |
| (குறைக்கப்பட்டது) | | | |
| உற்பத்தி கடன்கள் மீதான வட்டி | | (50,833) | - |
| நிலையான மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | | (54,115,725) | (17,388,383) |
| | | (120,972,957) | (107,970,829) |
| **நிதிப் பிரழ்வு தொடர்பாக தாக்கம் செலுத்தாத விடயங்களுக்கான சீராக்கங்கள்** | | | |
| தேய்மானங்கள் | | 27,141,801 | 18,510,514 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | | 2,669,937 | 667,863 |
| அரசின் மானியங்கள் வருமானமாக இனங்காணல் | | (15,713,792) | (11,757,590) |
| சந்தேகத்திற்கிடமான கடன்களின் ஒதுக்கீடு | | 19,414,395 | - |
| மோட்டார் வாகனங்களுக்கான மானியங்கள் | | 13,600,000 | - |
| நிலையான சொத்துக்களின் மறுமதிப்பீடு | | 26,450,000 | - |
| நிலையான சொத்துக்களின் மறுமதிப்பீட்டினை சரிசெய்தல் | | 6 | - |
| | | (47,410,610) | (100,550,042) |
| **முன்னைய காலகட்டங்களின் விடயங்கள்** | | | |
| முன்னைய காலகட்டங்களில் நிலையான சொத்துக்கள் மீதான சீராக்கம் | | 20,084,455 | 9,919,744 |
| முன்னைய காலகட்டங்களின் விடயங்களை சரிசெய்தல் | | 4,049,699 | 7,269,407 |
| செயற்பாட்டு மூலதன விடயங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு முன் செயற்பாடுகளிலிருந்து இலாபம் | | (23,276,455) | (83,360,891) |
| **செயற்பாட்டு மூலதன விடங்களில் மாற்றங்கள்** | | | |
| இருப்பு ^குறைதல்& | | 353,470 | (451,021) |
| கடனாளிகள் ( அதிகரித்தல்) | | (18,627,396) | (7,032,825) |
| வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் ^ அதிகரித்தல் & | | (89,205,638) | (18,935,816) |
| வைப்புக்கள் மீதான பொறுப்பு ^ அதிகரித்தல்& | | 10,000 | 90,000 |
| கடன் வழங்குநர்கள் ( அதிகரித்தல்) | | 67,243,034 | 11,148,940 |
| மற்ற கடன் வழங்குநர்கள் ( அதிகரித்தல்) | | 55,450,857 | (2,891,533) |
| | | (8,052,130) | (101,433,145) |
| **குறைக்கப்பட்டது -** | | | |
| பணிக்கொடை செலுத்தல் | | (2,737,750) | (3,000,900) |
| | | (10,789,880) | (104,434,045) |
| **முதலீட்டு நடவடிக்கைகளால் பெற்ற காசுப் பாய்ச்சல்** | | | |
| உற்பத்திக் கடன்களுக்கான வட்டி | | 50,833 | - |
| நிலையான மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | | 54,115,725 | 17,388,383 |
| நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல் | | (70,989,853) | (36,899,452) |
| திறைசேரி உண்டியல்களும் நிலையான வைப்புக்களில் முதலீடும் | | 78,439,384 | (74,261,174) |
| | | 50,826,209 | (198,206,288) |
| **நிதிச் செயற்பாடுகளில் பெற்ற காசுப் பாய்ச்சல்** | | | |
| திறைசேரிக் கிடைப்பனவுகள் | | 122,332,000 | 110,984,000 |
| நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | 173,158,209 | (87,222,288) |
| ஆண்டின் தொடக்கத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் இருப்பு | | 57,523,462 | 144,745,749 |
| 03 மாதங்களில் பூர்த்தியாகும் ரிபோ / திறைசேரி உண்டியல்கள் | 169,156,793 | | |
| ஆண்டின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் இருப்பு | 61,524,878 | | |
| | | 230,681,670 | 57,523,462 |

## நிதி அறிக்கையிடல் சம்பந்தமான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம்,

1. கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான உரிய கணக்குப் புத்தகங்களை வைத்திருப்பது தொடர்பாக,

2. கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைப்பாடுகள் தொடர்பான உண்மையான மற்றும் நியாயமான முன்வைப்பிற்காக வேண்டி, 1995 இலக்கம் 15 இனைக் கொண்ட இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரச் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரங்களிற்கு இணங்க கணக்குகளைத் தயாரித்தல் தொடர்பாக மற்றும்

3. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் ஊழல் மற்றும் மோசடிகளை தவிர்ப்பதற்காகவும் வேண்டி உசிதமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியுள்ளது.

## 1. பொதுவான தகவல்கள்

### 1.1.1 அமைவிடமும், சட்டவியல் நிலைப்பாடும்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 1971 இலக்கம் 47 இனைக் கொண்ட சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டுத்தாபனமாக நிறுவப்பட்டது. இதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம், கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 303 இனைக் கொண்ட இடத்தில் அமையப் பெற்றுள்ளது.

### 1.1.2 அடிப்படைச் செயற்பாடுகளும், செயற்பாட்டு இயல்புகளும்

இலங்கைச் சினிமாவின் உள்நாட்டு அடையாளத்தை சர்வதேச மட்டத்தில் அடையாளப்படுத்தக்கூடிய தரமான திரைப்படக் கலாச்சாரத்தை உருவாக்குவதில் முன்னோடியாக திகழல்.

### 1.1.3 வெளியீட்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட திகதி

இந்த நிதி நிலை அறிக்கைகளை பகிர்ந்தளிப்பதற்காக பணிப்பாளர் சபையினால் 2023.05.31 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 கணக்குகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை

### 1.2.1 இணக்கப்பாடு தொடர்பான அறிக்கை

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலை அறிக்கை, விரிவான வருமானம், உரிமை மாற்ற அறிக்கை, முக்கிய கணக்கியல் கொள்கை சுருக்கக் குறிப்புகள் (நிதி அறிக்கைகள்) சர்வதேச கணக்கியல் தரநிலை சபையினால் சர்வதேச நிதி அறிக்கை தரநிலை (IFRS) பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரங்களுடன் (SLFRS) இணங்கியதாவே தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.2.2 நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பு

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது.

**<u>1.2.3 கணக்கியல் அடிப்படை</u>**

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான பெறுமதி குறித்து உரிய வெளிப்பாடுகளைச் செய்யப்படாவிட்டால், நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

**1.2.4 <u>தொடர்ச்சி நிலை</u>**

நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது முகாமைத்துவத்தினால் கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை மதிப்பீடு செய்துள்ளது. கூட்டுத்தாபனம், அதன் செயற்பாடுகளை எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு அவசியப்படும் போதுமான வளங்கள் காணப்படுவதாக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றது. இருக்கின்ற சகல தகவல்களையும் கவனத்திற் கொண்டு எதிர்வரும் காலங்களில் கூட்டுத்தாபனத்தை மூடுவதற்கோ அல்லது அதன் செயற்பாடுகளை நிறுவத்துவதற்கோ காரணங்கள் காணப்படாததினால், தொடர்ச்சியாக செயற்படுகின்ற நிறுவனமாகக் கருதி நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**1.2.5 <u>செயறபடுதல மறறும முனவைததலுககான புழககததில உளள நிதி</u>**

கூட்டுததாபனததின செயறபாட்டுப புழககததில உளள நிதியாகக காணபபடும இலஙகை ரூபாவினால இநத நிதிக கூறறு முனவைககபபட்டுளளது.

**<u>1.2.6 முககியததுவம பெறுகினற கணககியல தீர்பபுகள, மதிபபீடுகள மறறும அட்டவணைகள</u>**

அறிககையிடபபடுகினற தினததில அறிககையிடபபட்ட வருமானம, செலவு, சொததுககள மறறும கடன பொறுபபுககள மறறும சாததியமறற பொறுபபுககளை வெளிபபடுததுதல தொடரபான அறிககைபபடுததபபட்ட எணணிககைகளில தாககம செலுததுகினற தீரபபுகள, மதிபபீடுகள மறறும அனுமானஙகளைப பெறுவதறகு நிதிக கூறறுகளைத தயாரிககும போது முகாமைததுவததிறகுத தேவைபபடுகினறது. எவவாறாயினும, இநத அனுமானஙகள மறறும மதிபபீடுகளில காணபபடுகினற உறுதியறற தனமை காரணமாக எதிரகாலததில சொததுககள மறறும கடன பொறுபபுககளில நிலவுகினற பெறுமதியில அவதானிககத தகக சீராககஙகளை மேறகொளவதறகுத தேவையான செலவாககினைச செலுத்த முடியும. இவவாறான விடயஙகளின போது தீரபபுகள, மதிபபீடுகள மறறும அனுமானஙகள உளளடககபபட முடியும.

**மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்**

எதிர்வரும் நிதியாண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் நிலவுகின்ற பெறுமதியில் அவதானிக்கக்கூடிய சீராக்கங்களை மேற்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து, முக்கிய அவதானங்கள் ஏற்பட முடியுமான, அறிக்கையிடப்படுகின்ற திகதியில் நிலவுகின்ற எதிர்காலம் தொடர்பான முக்கிய அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டு மூலாதாரங்கள் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**(அ) நிதி நியமப் படிவங்களின் நியாயமான பெறுமதிகள்**

இருப்பு நிலைப்பத்திரத்தில் அறிக்கையிடப்படுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் நியாயமான பெறுமதி செயற்பாட்டுச் சந்தையில் தோன்ற முடியாததுடன், அவை தள்ளுபடியான நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் / அல்லது கணிதவியல் மாதிரிப் படிவங்கள் அடங்கலான மூலோபாயத் திட்டங்களைப் பிரயோகித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாதிரிப் படிவத்தின் உள்ளீடுகள், முடியுமான சந்தர்ப்பங்களில் ஆய்வு செய்யக் கூடிய வர்த்தக சந்தைத் தரவுகள் அவ்வாறான விடயங்கள் இல்லாத விடத்து தீர்ப்புகளை வழங்குகின்ற போதே பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறான நியதிகள் தொடர்பான அனுமானங்களில் மாற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ள நிதி நியமப் பத்திரங்களில் நியாயமான பெறுமதியின் பால் தாக்கம் செலுத்த முடியும்.

**(ஆ) நியாயமான பெறுமதி**

| | | திரையரங்குகள் | தயாரிப்பாளர்கள் | பிற |
|---|---|---|---|---|
| இருப்பு முன்/ கொ | 185,612,282.00 | 112,250,315.16 | 63,375,772.70 | 9,986,194.58 |
| இலாபங்களை இலாபக் கணக்கிற்கு மாற்றுதல் | 19,414,395.00 | 10,982,835.27 | 5,045,266.04 | 3,386,293.25 |
| | **205,026,677.00** | **123,233,150.43** | **68,421,038.74** | **13,372,487.83** |

**கடனாளிகளுக்கான குறைபாடுகளை சரிசெய்தல்**

| | |
|---|---|
| 2022.01.01 ஆந் திகதிக்கு | 185,612,282 |
| இலாபங்களை இலாபக் கணக்கிற்கு மாற்றுதல் | 19,414,395 |
| இருப்பு பின்$கொ' 2022.12.31 | **205,026,677** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2022.12.31 ஆந் திகதிக்கான**
**நிதி நிலைமைக்கான குறிப்புகள்**

| | 2022 ரூபா' | 2021 ரூபா' |
|---|---|---|
| குறிப்பு ( 17 | | |
| வைப்பும் எதிர்காலக் கொடுப்பனவும் | | |
| வைப்புக்கள் | 4,653,853.88 | 3,925,436.37 |
| முற்பணம் செலுத்துதல் | 499,033.85 | 87,443.39 |
| நலன்புரி சங்கத்திற்கு இறுதிச் சடங்குகளுக்கான முற்பணம் | - | - |
| | 5,152,887.73 | 4,012,879.76 |
| கடன்களுக்கான இழப்பீடுகளைச் சரிசெய்தல் | (653,728.10) | (653,728.10) |
| | 4,499,159.63 | 3,359,151.66 |
| குறிப்பு ( 18 | | |
| பணம் மற்றும் வங்கி இருப்பு | | |
| மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-1-0208647 | 588,541.78 | 373,994.47 |
| மக்கள் வங்கி - ந.க. இல. 055-1-001-5-0667533 | 1,690,172.53 | 1,046,786.29 |
| மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-6-0208664 | 5,585,038.03 | 2,080,681.13 |
| இலங்கை வங்கி - ந.க. இல. 0002323272 | 1,670,950.98 | 2,218,557.22 |
| இலங்கை வங்கி - ந.க. இல. 0002323131 | 936,902.48 | 712,999.48 |
| இலங்கை வங்கி - ந.க. இல. 0002323354 | 34,981,110.56 | 19,438,605.64 |
| இலங்கை வங்கி - ந. க. இல. 0002323363 | 12,701,701.21 | 3,456,069.51 |
| இலங்கை வங்கி - ந. க. இல. 0005002189 | 3,370,426.20 | 2,191,823.01 |
| இலங்கை வங்கி - ந. க. இல. 5152460 | - | - |
| | 61,524,843.77 | 31,519,516.75 |
| கையிருப்பில் உள்ள பணம் | | |
| சில்லறைத் தொகை - தலைமை அலுவலகம் | - | - |
| சில்லறைத் தொகை - கலையரங்கம் | - | - |
| சில்லறைத் தொகை - திரைப்படக் காப்பகம் | 34.00 | 34.00 |
| | 34.00 | 34.00 |
| 03 மாதங்களில் முதிர்ச்சியடையும் வைப்புத்தொகை | | |
| REPO வைப்புத்தொகை | | 21,935,375.00 |
| திறைசேரி உண்டியல்கள் | 20,800,938.00 | 4,068,535.94 |
| நிலையான வைப்பு | 148,355,854.68 | |
| | 169,156,792.68 | 26,003,910.94 |
| மொத்தம் | 230,681,670.45 | 57,523,461.69 |
| குறிப்பு ( 19 | | |
| மானியங்கள் | | |
| திறைசேரி உண்டியல்கள் | 114,731,344.61 | 101,651,934.44 |
| ^-& பணப் பெறுமதி நீக்கம் | (12,313,791.99) | (11,757,589.83) |
| | 102,417,552.62 | 89,894,344.61 |
| மோட்டார் வாகன மானியம் | 13,600,000.00 | - |
| ^-& பணப் பெறுமதி நீக்கம் | (3,400,000.00) | - |
| | 10,200,000.00 | - |
| மொத்தம் | 112,617,552.62 | 89,894,344.61 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2022.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைக்கான குறிப்புகள்

| | 2022<br>ரூபா' | 2021<br>ரூபா' |
|---|---|---|
| குறிப்பு ( 20 | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | | |
| முன்கொண்டு வரப்பட்ட இருப்பு - 2022.01.01 | 49,002,596.50 | 51,335,634.00 |
| 2022 இற்கு முன்னைய சீராக்கம் | 660,280.00 | (1,775,311.00) |
| ஆண்டிற்கான ஒதுக்கீடு | 2,009,657.00 | 2,443,174.00 |
| பணச் செலுத்துகை | (2,737,750.00) | (3,000,900.00) |
| | 48,934,783.50 | 49,002,597.00 |
| குறிப்பு ( 20-1 | | |
| எதிர்வரும் 12 மாதங்களின் பின்னர் செலுத்தல் | 44,214,793.50 | 48,057,987.00 |
| குறிப்பு ( 20-2 | | |
| எதிர்வரும் 12 மாதங்களினுள் செலுத்தல் (2023.12.31 வரை) | 4,719,990.00 | 944,610.00 |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| குறிப்பு ( 21 | | | |
| வைப்பு | | | |
| NFC திரையரங்குகளின் பிணை வைப்பு | | 475,271.70 | 465,271.70 |
| சிற்றுண்டிச்சாலை வைப்பு | | 30,000.00 | 30,000.00 |
| பாதுகாப்பு வைப்பு - | திரையரங்குகள் | 2,326,727.11 | 2,326,727.11 |
| | பணியாளர்கள் | 5,000.00 | 5,000.00 |
| | திரைப்படக் கூட்டுத்தாபனம் | 7,500.00 | 7,500.00 |
| | சினிமாத் திட்டம் | 45,000.00 | 45,000.00 |
| | சுகாதாரச் சேவைகள் | 160,000.00 | 160,000.00 |
| | | 3,049,498.81 | 3,039,498.81 |

| | 2022 | 2021 |
|---|---|---|
| குறிப்பு ( 22 | | |
| திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள் | | |
| திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள் | 330,280,811.21 | 263,037,777.65 |
| ^-& கடன் வழங்குநர்களுக்கான இழப்பீட்டை சரிசெய்தல் | (18,046,803.77) | (18,046,803.77) |
| | 312,234,007.44 | 244,990,973.88 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2022.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைக்கான குறிப்புகள்

| | 2022<br>ரூபா' | 2021<br>ரூபா' |
|---|---|---|
| குறிப்பு ( 23 | | |
| **நிதிப் பொறுப்புகள்** | | |
| திரட்டிய செலவுகள் (குறிப்பு இல. 2.10) | 44,917,712.50 | 53,565,690.00 |
| | 44,917,712.50 | 53,565,690.00 |

| | 2022 | 2021 |
|---|---|---|
| குறிப்பு ( 24 | | |
| **பிற கடன் வழங்குநர்கள்** | | |
| செலுத்தப்பட வேண்டிய மதிப்பு கூட்டப்பட்ட வரி | 152,612.36 | 152,612.36 |
| கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடுகள் | 2,200,000.00 | 2,178,000.00 |
| இறைவரி ஆணையாளர் ( முத்திரைகள்) | 30,673.25 | 41,648.25 |
| உரிமை கோரப்படாத ஊதியங்கள் | 539,151.97 | 539,151.97 |
| E. P. F. | 591,842.06 | 656,759.46 |
| E. T. F. | 70,375.45 | 72,955.35 |
| இதர கடன் வழங்குநர்கள் | 759,734.15 | 857,754.53 |
| ^-& செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடு | (644,839.88) | (644,839.88) |
| தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் (2.11) | 3,525,795.22 | 3,525,795.22 |
| ரித்மா சேர்கிட் நிர்வாகக் கணக்கு | 35,504,261.01 | 5,220,132.52 |
| உழைக்கும் போது வரி செலுத்தல் | 38,252.84 | 38,252.84 |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு | 577,189.76 | 577,189.76 |
| பெறத்தக்க உற்பத்திக் கடன் வட்டிக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு | - | 1,028,121.58 |
| பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபை | 114,800.79 | 114,800.79 |
| சினிமா கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான நிதி கட்டுப்பாட்டுக் கணக்கு | - | - |
| திரைப்படங்களின் மறுசீரமைப்பு | - | - |
| சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் | 976,303.16 | 976,303.16 |
| நிச்சயமற்ற கணக்குகள் | - | 52,680.00 |
| ஜனாதிபதி திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கான ஒதுக்கீடு | 35,000,000.00 | - |
| ஜனாதிபதி திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கு கிடைத்த நன்கொடைகள் | 50,000.00 | |
| | 79,486,152.14 | 15,387,317.91 |

பணிப்பாளர் சபை - 2022. 01.01 ஆந் திகதி முதல் 2022 மே மாதம் வரை

| தொடரிலக்கம் | பெயர் | பதவி | முகவரி |
|---|---|---|---|
| 1 | கலாநிதி திரு. ஜயந்த தர்மதாஸ | தலைவர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. |
| 2 | திரு. மொஹான் சமரநாயக | தகவல் பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தகவல் திணைக்களம் | அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 05. |
| 3 | திரு. ஷந்திரபால லியனகே | பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம் கொழும்பு 07. |
| 4 | திருமதி. தரணீ அனோஜா கமகே | கலாசார அலுவல்கள் பணிப்பாளர் - கலாசார அலுவல்கள் திணைக்களம் | கலாசார அலுவல்கள் திணைக்களம், 08வது மாடி செத்சிரிபாய, பத்தரமுல்ல. |
| 5 | கலாநதி தம்மிக திஸாநாயக | விரிவுரையாளர் - அழகியற் கலை பல்கலைக்கழகம் | இல.2/2, புரஹல வீடமைப்புத் திட்டம், நைவல, வேயங்கொடை. |
| 6 | பேராசிரியர் கோலித பானு திஸாநாயக | பீடாதிபதி - பட்டப்பின் பட்ட கற்கைப் பிரிவு, அழகியற் கலை பல்கலைக்கழகம் | இல. 561/1, கல்ஏதன்ட வீதி, கோனவல களனி. |
| 7 | கலாநிதி ரவீந்திர ரண்தெணிய | பிரபல்ய நடிகர் | இலக்கம் 283ஏ, பழைய கண்டி வீதி, தலுகம, களனி. |
| 8 | திரு. தம்மித் பொன்சேகா | பிரபல்ய நடிகர் | இல. 140/33, கலாபுர, டெம்ப்லர்ஸ் பிளேஸ், கலகிஸ்ஸ. |
| 9 | திருமதி. என்.பி.ஏ. ஆர். ஜயவர்தன | திறைசேரிப் பிரதிநிதி | அரச கணக்குகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01. |
| 10 | திருமதி. டப்ளியூ.ஏ.ஜே.சீ. விக்கிரம ஆரச்சி | திறைசேரிப் பிரதிநிதி | பணிப்பாளர் பதிற்கடமை, அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களம், நிதி அமைச்சு. |
| 11 | திரு. ஜூட் நிலுக்ஷான் | திறைசேரிப் பிரதிநிதி | பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம். |
| 12 | திரு. திலக் ஹெட்டி ஆரச்சி | மேலதிக செயலாளர் ( ஊக்குவிப்பு), புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு |
| 13 | திருமதி. கே.ஏ.டீ.ஆர். நிஷாந்தி ஜ | செயலாளர், தேசிய பாரம்பரியம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்களை மேம்படுத்துவதற்கான இராஜாங்க அமைச்சு | தேசிய பாரம்பரியம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்களை மேம்படுத்துவதற்கான இராஜாங்க அமைச்சு |

**2022 ஆகஸ்ட் மாதம் முதல் திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கான புதிய தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையை நியமிக்க நிரல் அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

| தொடரில | பெயர் | பதவி | முகவரி |
|---|---|---|---|
| 1 | சட்டத்தரணி திரு. பி.எம். தீபால் ஷந்திரரத்ன (2022.08.08 ஆந் திகதியிலிருந்து) | தலைவர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. |
| 2 | திரு. தினித் ஷிந்தக கருணாரத்ன (2022.09.15 ஆந் திகதியிலிருந்து) | அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தகவல் திணைக்களம் | அரசாங்க தகவல் திணைக்களம், கொழும்பு 05. |
| 3 | திரு. நளின் குமார நிஸ்ஸங்க (2022.08.10 ஆந் திகதியிலிருந்து) | பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம் கொழும்பு 07. |
| 4 | திருமதி. தரணி அனோஜா கமகே (2022.08.10 ஆந் திகதியிலிருந்து) | கலாச்சார அலுவல்கள் பணிப்பாளர் - கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | கலாசார அலுவல்கள் திணைக்களம், 08வது மாடி செத்சிரிபாய, பத்தரமுல்ல. |
| 5 | ஜனாதிபதி சட்டத்தரணி திரு. ஜகத் விக்கிரமநாயக (2022.10.14 ஆந் திகதியிலிருந்து) | ஜனாதிபதி சட்டத்தரணி | 1174, தம்மோதய மாவத்தை, பத்தரமுல்ல. |
| 6 | திரு. ஏஷ்லி ரத்னவிபூஷன (2022.08.08 ஆந் திகதியிலிருந்து) | சினிமா துறைக்கான பிரதிநிதி | 118, தெஹிவல,பொரலஸ்கமுவ. |
| 7 | நதீகா குணசேகர (2022.08.08 ஆந் திகதியிலிருந்து) | சினிமா துறைக்கான பிரதிநிதி | இல. 552 பீ, வெஸ்ட்பெரி பார்க், விஜேசிங்க மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல. |
| 8 | திரு. பி.பி. எஸ். ஆர். த சில்வா (2022.11.09 ஆந் திகதியிலிருந்து) | பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ( திறைசேரிப் பிரதிநிதி) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், செயலகம் ( 3 ஆம் மாடி), கொழும்பு 01. |

தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை
------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்று
--------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
----------------------------------------

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான தகுதியுடைய கூற்று, அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் விளைவுகள் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகையையும் காசுப் பாய்ச்சிலினையும் இலங்கை கணக்கீட்டு தர நியம அடிப்படைகளுக்கு அமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 10 இன் 03 மற்றும் 08 ஆம் பந்தியின் படி நிதிக் கூற்று அறிக்கையிடப்படும் திகதி மற்றும் நிதிக் கூற்றினை சமர்ப்பிப்பதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெறும் திகதிக்கிடையிலான காலத்தில், நிதிக் கூற்றினை அறிக்கையிடப்படும் திகதிக்கு நிலவிய நிலைமை தொடர்பில் ஆதாரங்களை முன்வைக்கும் கொடுக்கல் வாங்கல் முன்னைய நிதிக் கூற்றில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டியிருந்தும், கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்டு வரந்த 02 வழக்குகள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தீர்வுகளின் படி குறித்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 4,645,26 ஆன தொகை நிலுவை நிதிக் கூற்றில் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் படி கூட்டுத்தாபனத்தின் சொத்துகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி தற்போதைய மாற்றங்களின் அடிப்படையில் அந்த சொத்துகள் 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு முறை மீள்கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும், கூட்டுத்தாபனத்தினால் அந்த சொத்துகள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் படி நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பயனுறுதி ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படவில்லை என்ற காரணத்தினால் அதன் மொத்தம் ரூபா. 154,976,666 ஆன பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானமாக இருந்தது, ஆனால் தொடர்ந்தும் பயன்பாட்டில் கொள்ளப்பட்டுள்ளதோடு, தர நியம இலக்கம் 79(ஆ) ஆம் பந்தியின் படி இந்த சொத்துகள் தொடர்பில் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்படி, இந்த சொத்துகளின் பயனுறுதி ஆயுட் காலம் தொடர்பில் மதிப்பிடப்பட்ட கோளாறு இலங்கை கணக்கீட்டு தர நியம இல்கம் 08 இன் படி மீள் திருத்தம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கூட்டுத்தாபனத்தில் மெதுவாக அசையும் மற்றும் அசையாத கையிருப்புகளின் மொத்தப் பெறுமதி ரூபா. 8,597,176 ஆகும். இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 79 (அ) ஆம் பந்தியின் படி செயற்பாட்டில் இல்லாத சொத்துகள் தொடர்பிலான நிதிக் கூற்றுகளில் தேறிய பதிவேட்டின் பெறுமதிக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றாலும், கூட்டுத்தாபன வளாகத்தினுள் மற்றும் அதற்கு வெளியே கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களினுள் காணப்படும் செயலற்ற சொத்துகள் மற்றும் காலம் கடந்த பழைய சொத்துகள் தொடர்பில் போதுமானளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த இருப்புக்களின் பெறுமதியை

உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியப்படும் விஸ்தீரணமான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் படி 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு 2 லெஜர் பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டு ரூபா. 19,812,600 ஆன நிலுவைக்கு ஒத்திசைவான வகையில் மொத்தம் ரூபா. 21,2633,945 ஆன தொகை பற்று மற்றும் ரூபா. 1,451,345 ஆன தொகை கடன் பெறுமதியாக உள்ளடக்கப்பட்டு மீளாய்வு ஆண்டின் ஆரம்ப நிலுவையாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த பற்று மற்றும் கடன் நிலுவையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எழுத்து மூல ஆதாரங்கள் எதுவும் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் படி 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு 03 பேரேட்டு கணக்குகளின் நிலுவையின் மொத்தம் ரூபா. 5,346,024 ஆன தொகையாக இருந்தாலும், அந்த பேரேட்டுக் கணக்குகளில் மீளாய்வு ஆண்டின் ஆரம்ப நிலுவையாக மொத்தம் ரூபா. 7,357,214 ஆன தொகை வரை இருப்பதனால் நிலுவைகளுக்கு இடையில் ரூபா. 2,011,190 ஆன தொகையில் வேறுபாடு காணப்பட்டது.

(எ) பேரேட்டுக் கணக்கு இலக்கம் 60-1271 மற்றும் 70-3422 இன் கீழ் காட்டப்பட்டுள்ள ஊழியர் கடன் வட்டி (சொத்து) மற்றும் (பொறுப்பு) கணக்குகள் இரண்டு காணப்பட்டாலும், ரூபா. 1,467,383 ஆன தொகை பற்று மற்று கடன் நிலுவைகள் ஒன்றுடன் ஒன்று தீர்க்கப்பட்டிருந்தாலும், இலங்கை கணக்கீட்டு தர நியமத்தின் படி இது தொடர்பில் தேவையான வெளிப்படுத்துகை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான உரித்தாகும் மாறுபட்ட கூற்றுக்களின் படி ஆண்டிறுதியில் திரட்டிய இலாபம் ரூபா. 441,170,247 ஆக இருந்தாலும், மீளாய்வு ஆண்டில் பேரேட்டின் படி ஆரம்ப நிலுவை ரூபா. 431,752,6933 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) கடன் வழங்குநர் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 329,57,291 ஆன தொகை பற்று வைத்தல் மற்றும் ரூபா. 291,649,659 ஆன தொகையை வைப்புச் செய்வதற்கு உரித்தான ஜேர்னல் வவுசர் 02 மற்றும் பெறுமதியாக ரூபா. 599,276,716 ஆன தொகை ஜேர்னல் வவுசர் 135 இற்கு உரித்தான தொடர்புடையதான ஆவணங்கள் / எழுத்து மூல உறுதிப்படுத்துகை கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கூட்டுத்தாபனத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் மென்பொருள் (Quick Book) இன் மூலம் பெற்ற நிதி நிலை கூற்றின் படி மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 1,103,950,458 ஆக இருந்தும், கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றின் படி அதன் பெறுமதி அது ரூபா. 1,247,881,012 ஆக காட்டப்பட்டுள்ளதால் அந்நிலுவைக்கு இடையில் ரூபா. 143,930,554 ஆன தொகையில் வேறுபாடு இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஓ) காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாத ரூபா. 43,600,000 ஆன தொகை மோட்டார் வாகன மானியங்கள் மற்றும் உரித்து மாற்றக் கூற்றில் தீர்க்கப்பட்ட ரூபா. 26,4550,000 ஆன தொகை மோட்டார் வாகன மீள்கணிப்பீட்டு இலாபத் தொகை காசுப் பாய்ச்சலில் அதன் பெறுமதி ரூபா. 70,98,853 ஆன தொகை எனக் காட்டப்பட்டுள்ளது.

(ஔ) மீளாய்வு ஆண்டில் நிலையான சொத்துக்கள் கையகப்படுத்திக் கொள்ளப்பட்ட பெறுமதி ரூபா. 30,939,853 ஆன தொகையாக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா. 70,989,853 ஆன தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(க) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ஆந் திகதிக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விஸ்தீரணமாக அட்டவணையின் படி திரைப்பட வாடகை கடனாளி நிலுவையாக ரூபா. 439,289,504 ஆன தொகையாக இருந்தாலும், அத்திகதிக்கு நிதி நிலைக் கூற்றின் படி அந்நிலுவை ரூபா. 411,680,539 ஆன தொகையாக இருப்பதனால் அந்நிலுவைகளுக்கு இடையில் ரூபா. 27,608,65 ஆன தொகையில் வேறுபாடு இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(கி) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரைப்பட வாடகை கடனாளிகளுக்குரிய ரூபா. 161,855,343 ஆன தொகை மேலதிக ஒதுக்கீட்டுப் பெறுமதியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குறித்த அட்டவணை மற்றும் பழைய திரைப்பட வாடகை கடனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 27,789,043 ஆன தொகை கொண்ட நிலுவை தொடர்பில் வயது அடிப்படையிலான பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(கீ) பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபையின் 2021 ஆம் ஆண்டிற்கு கிடைக்கப்பெற வேண்டிய ரூபா. 960,000 ஆன தொகை கட்டிடங்கள் வாடகை கணக்குப் பதிவு செய்யப்படவில்லை என்பதால் கிடைக்கப் பெற வேண்டிய வாடகை மற்றும் திரட்டிய இலாபம் அப்பெறுமதியில் இருந்து குறைத்துக் காட்டப்பட்டுள்ளதோடு அச்சபையினால் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு மே மாதம் வரை குத்தகை வாடகை தொகையைக் கொண்டு மேலும் புதிய கட்டிடங்களை நிர்மானிப்பதற்காக ஏற்கப்பட்ட செலவுக்காக தீர்க்கப்பட்டிருந்த ரூபா. 13,120,000 ஆன தொகை கணக்குப் பதிவதற்கு மற்றும் வெளிப்படுத்துற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் புதிய கட்டிடங்களை நிர்மானிப்பதற்காக அச் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை கண்டறிந்து கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(கு) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிதிக் கூற்றின் படி நிலவிய ரூபா. 20,654,773 ஆன தொகையைக் கொண்ட ஊழியர் கடன் நிலுவையில் ரூபா. 545,052 ஆன தொகை கண்டறியப்படாத கடன் நிலுவையாக உள்ளது.

(கூ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் படி கடன் வழங்குநர் நிலுவை ரூபா. 364,301,563 ஆன தொகையாக இருந்தாலும், அத்திகதிக்கு பேரேட்டின் படி அந்நிலுவையானது ரூபா. 330,280,811 ஆன தொகையாக இருப்பதனால் ரூபா. 34,020,752 ஆன தொகையில் வேறுபாடு நிலவுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(கெ) மீளாய்வு ஆண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா. 2,323,223 ஆன தொகையாக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா. 2,737,750 ஆன தொகை வரை காட்டப்பட்டிருந்தும் அதற்கமைய ரூபா. 414,527 ஆன தொகையில் வித்தியாசம் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(கே) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றினுன் காசு அல்லாத வேறுபாட்டின் கீழ், செம்மையாக்கம் செய்யப்பட வேண்டிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகளின் அதிகரிப்புப் பெறுமதி ரூபா. 2,009,657 ஆன தொகையாக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றினுள் சீராக்கம் செய்யப்பட்ட அப்பெறுமதி ரூபா. 2,669,37 ஆன தொகையாக உள்ளது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த.நி.) இக் கணக்காய்வு என்னால் நடாத்தப்பட்டது. அத்தகைய கணக்கீட்டு தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

### 1.3 கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கிய பிற தகவல்கள்.

---

இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றில் மற்றும் அது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், பிற தகவல்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த பிற தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
நிதிக் கூற்று தொடர்பிலான எனது அபிப்பராயத்தில் பிற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு அது பற்றி எந்த விதத்திலான சான்றுபடுத்தலோ அல்லது அபிப்பிராயமோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பாக எனது கணக்காய்விற்கு ஏற்ப, மேற்கூறிய அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் பெற முடியுமாக இருந்தால் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது பிற தகவல்கள் நிதிக்

கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொண்ட எனது அறிவிற்கு ஏற்ப அளவு ரீதியாக இணங்காதிருப்பது பற்றி கவனிப்பதும் எனது பொறுப்பாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்ட பிற தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில், இந்த பிற தகவல்களில் போதுமானளவு பிறழ் கூற்றுகள் பதியப்பட்டுள்ளதாக நான் யூகித்தால், அவற்றை நிவர்த்தி செய்வதற்காக என்னால் கட்டுப்பாட்டுத் தரப்பினருக்கு அந்த விடயங்களை அறிவிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் என்னால் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்பாட்டுத் தரப்பினரின் பொறுப்புக்கள்

-------------------------------------------------------------------------------------------

இந் நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையிலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகக் காணப்படுவதோடு, முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை கலைக்கக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படையில் கணக்குகளைப் பதிவிடல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைப்பாட்டுக்குரிய விடயங்களை கண்டறிவதற்கும் முகாமைத்துவம் பெறுப்பாக இருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையுடன் தொடர்புடைய பரீட்சிப்புக்களுக்கான பொறுப்புக்கள், ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுக்கள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும் . பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதாயின் அவை முக்கியமானவை என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேகங்கள் நிலவுவதாகவும் காணப்படுகின்றது. மேலும்,

≠ நான் மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்காணல் அல்லது மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களின் போது உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு மோசடி அல்லது தகவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கும், போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகவும் உள்ளது.மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் பாரதூரமானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச் சக்திக்கும், உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

≠ கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

≠ பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

≠ நிறுவனமாக தொடர்வதற்கு இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் படி இயங்கும் நிறுவன அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்திற்கேற்பவும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் படியும் முடிவெடுக்கின்றேன். முக்கியமான ஏதோவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

≠ வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு றெய்யப்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்டுள்ள முக்கிய கணக்காய்வு தேடல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க நிர்வாகம் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

2. **பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்விற்காக அவசியப்படும் சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது தேடல்களில் காட்டும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தினால் முன்னளிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப எனது அறிக்கையின் அபிப்பிராயத்தின் அடிப்படையில் அப்பகுதியின் (அ), (ஆ), (இ) மற்றும் (உ) என்ற அவதானிப்புக்ளைத் தவிர்ந்து முந்திய வருடங்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்படும் செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் மற்றும் போதியளவிலான விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன்வைக்கும் அளவுக்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஏவரேனுமொரு உறுப்பினர் அத்தகைய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏதேனும் ஒரு ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார ஏதுக்கு அப்பால் தொடர்பு உள்ளதாகவும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்த்து ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்,

| சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக்குறிப்பு | அவதானங்கள் |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டு இலக்கம் 47 இனை கொண்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 4 (ஏ) ஆம் பிரிவு | இலங்கையினுள் மற்றும் இலங்கைக்கு வெளியேயான திரைப்படங்கள் தொடர்பில் சந்தை ஆய்வுகளை நடத்துகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் III ஆம் பிரிவு 16 (2) ஆம் பந்தி மற்றும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய அரச வர்த்தகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் செயற்பாட்டு கையேட்டின் 6.6 | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்றினையும் வரைவிடப்பட்ட வருடாந்த அறிக்கையும் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்படல் வேண்டும் என்றாலும், கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று 05 மாதங்கள் தாமதமாகியதன் பின்னரே 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (இ) 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆந் திகதி மற்றும் இலக்கம் 05/2020 கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 (அ) மற்றும் (ஆ) பந்திகள் | 2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக 14 மோட்டார் வாகனங்கள் காணப்பட்டதோடு, 2020 ஆம் ஆண்டிலிருந்தே 06 வாகனங்கள் ஓட்டத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்தன. 2022 ஆம் ஆண்டில் 05 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் பயன்பாட்டில் |

| | |
|---|---|
| | இருந்துள்ளதோடு, இந்த சுற்றறிக்கையின் படி , பழுதுபார்ப்புச் செய்து மீள பயன்பாட்டில் கொள்ளல் அல்லது பயன்பாட்டில் இல்லாத வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 14 மற்றும் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆந் திகதி பிஈடீ/12 இன் அரச வர்த்தக சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | குறித்த நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் 03 மொழிகளைக் கொண்ட வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும், கூட்டுத்தாபனத்தின் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய அரச வர்த்தக சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் 2.3 ஆம் பந்தி | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டினை உள்ளடக்கிய வகையில் மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (எ) பிரிவின் படி தேவைப்பாட்டுக்கு ஏற்ப கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் அதன் தொழிற்பாடுகளுக்கு இணங்காத வகையில் தொழிற்பட்டுள்ளது எனக் கூறுவதற்கும்.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த்தாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் உரித்துடைய சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்,

**2.3** பிற விடயங்கள்

(அ) 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 1204 கொண்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் வாகன ஓட்டத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்த GB- 1371 என்ற வான் வாகனத்தை முறைசார்ந்த ஒழுங்கு விதிகளின் படி பழுதுபார்ப்புச் செய்து பயன்பாட்டில் கொள்வதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தும் 02 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இந்த வான் வாகனத்தை புதுப்பித்து பயன்பாட்டில் கொள்ள எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரையரங்குகளை நவீனமயப்படுத்தலுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையின் மொத்தம் ரூபா. 83,517,103 ஆகவும் மற்றும் திரையரங்குகளில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகை ரூபா. 411,680,538 உள்ளடங்களாக மொத்தம் ரூபா. 495,197,641 ஆன தொகை கிடைக்கப் பெறவேண்டிய முழுப் பணத் தொகையில் மொத்தம் ரூபா. 348,464,266 ஆன தொகை மேலதிக மற்றும் சந்தேகமான கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அத்திகதிக்கு அறவிடப்பட முடியுமான தேறிய கடன் நிலுவை ரூபா. 146,733,375 ஆன தொகையாக காணப்பட்டது. மேலும் கணக்காய்விற்கு முன்னளிக்கப்பட்ட திரையரங்கு கடனாளி காலப் பகுப்பாய்வின் படி ரூபா. 214,135,368 ஆன தொகை கடனாளி நிலுவையாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வருவதோடு, அத்தொகை முறையாகவும் காலத்திற்கேற்பவும் அறவிட்டுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக ஒரு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதோடு, கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆந் திகதியில் கூட, 2023 ஆம் ஆண்டுக்கான குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு, நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு உரித்தான பரிந்துரையை வழங்கவும் குழுவினால் முடியாமல் போயுள்ளது. 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு கிட்டிய 10 வருடங்களுக்கு நிலுவைக் கடன் மற்றும் நிலுவைத் தொகையை முறையான ஒழுங்குபடுத்தலின் படி அறவிட்டுக் கொள்வதற்கு அரச வர்த்தக திணைக்களத்தினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தும், அந்த ஆலோசனைகளின் படி நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவி வருகின்ற கூட்டுத்தாபனத்தின் நலன்புரிச் சங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா. 354,000 ஆன தொகை மற்றும் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தினால் காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படங்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய ரூபா. 1,360,404 ஆன தொகை அறவிட முடியாதுள்ள நிலுவையினுள் பதியப்பட்டுள்ளதோடு, கூட்டுத்தாபனத்தின் உள்ளகப் பிரிவுக்கு இடையில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மொத்தம் ரூபா. 870,659 ஆன தொகை திரைப்படங்கள் மற்றும் இரசாயனக்கூட பொருட்களின் இருப்பு 2024 ஆம் ஆண்டில் இருந்து காலாவதியாதல் மற்றும் தற்போது பயன்படுத்தாத காரணத்தினால் பயன்பாட்டில் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டிருந்தும், இந்த செயற்பாட்டில் இல்லாத சொத்துக்களை நீக்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பெறுமதி ரூபா. 44,17,713 ஆன திரட்டிய செலவுகளில் ரூபா. 4,523,718 ஆன திரட்டிய செலவுகள் 05 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு செலுத்தப்பட்டவையாகும். இதன் படி திரட்டிய செலவுகள் தொடர்பில் உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுதாபனத்தின் தலைமை அலுவலகம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட குருதுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஆ.தி.கொ. 9848 ஆம் படவரைபின் துண்டு இலக்கம் 01 ஆம் அளவுடைய 1.1235 ஹெக்டேயர் காணியில் அமைந்துள்ளது. இந்த காணியின் சட்டபூர்வ உரிமையை கூட்டுத்தாபனம் கையகப்படுத்திக் கொள்ளாமல் அது கூட்டுதாபனத்தின் தலைமை அலுவலகம் உள்ளிட்ட பல கட்டிடங்களை நிர்மானித்து அதனை கூட்டுதாபனத்தின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டு வருகின்றது.

(ஏ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இலக்கம் 224 இனைக் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ள இரு மாடிக் கட்டிடத்தின் முதல் மாடி இலக்கம் 4660 இன் குத்தகை ஒப்பந்தத்தின் படி 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆந் திகதி வரையான ஒரு மாத காலத்திற்கு ரூபா. 315,000 ஆன தொகை குத்தகை வாடகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் செலசினே ரூபவாஹினி

நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பிக்காமல் மற்றும் மொத்தமாக ரூபா. 12,111,000 ஆன தொகை நிலுவை குத்தகைப் பணத்தைச் செலுத்தாமல் கட்டிடத்தைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதி கட்டிடத்தை மீள கூட்டுத்தாபனத்திடமே கையளிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை இந்த நிலுவை குத்தகைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதியின் பின்னர் இந்த கட்டிடத்தை உற்பத்தித் திறன் வாய்ந்த பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கையிருப்பு கணக்கெடுப்புப் பத்திரத்தின் படி பௌதீகம் அல்லாத ரூபா. 5,253,887 ஆன பெறுமதி கொண்ட திரைப்படங்களின் இருப்பின் இறுதிப் பங்கினுள் உள்ளடங்கி இருப்பதோடு, இந்த கையிருப்பு தொடர்பில் தேவைப்படும் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்க அல்லது புத்தகங்களில் பதிவழிக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கையிருப்புக் கணக்கெடுப்புச் சபையின் அறிக்கைக்கு ஏற்ப தளுகம கலையகத்தின் களஞ்சியத்திற்குச் சொந்தமான கையிருப்பு லெஜர் அநேகமானவை கரையான்கள் அரித்து சேதப்படுத்தியதன் காரணமாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவைப்படும் எழுத்து மூல ஆதாரங்கள் காணப்படாமை காரணமாக கலையத்தில் காணப்பட்ட ரூபா. 3,169,938 ஆன பெறுமதியுடைய கையிருப்பை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான செப்டம்பர் மாதம் 18 ஆந் திகதியில் முகாமைத்துவத்தினால் கையிருப்பு ஆவணம் மீண்டும் தயாரிக்கப்பட்டு கையிருப்பினை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கூட்டுத்தாபனத்தின் பிரதான களஞ்சியசாலையினுள் 10 வருடங்களைத் தாண்டிய 7692 திரைப்பட சஞ்சிகைகள் களஞ்சியசாளையினுள் இடவசதிகள் இன்றி வைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளது. கூட்டுதாபனத்தின் ஆவணங்களின் மூலம் செலவு அல்லது தற்போதைய பெறுமதியை கண்டறிந்து கொள்ள முடியாதுள்ள இந்த பொருட்கள் தொடர்பில் முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதோடு, சேதங்களுக்கு உட்பட்டு வரும் இந்த பொருட்களை அகற்றுவதற்கு முகாமை எந்த முன்னெடுப்புக்களும் எடுத்திருக்கவில்லை.

(ஔ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்படங்களை விநியோகிக்கும் விலைக் கழிவு கூட்டுதாபனத்தின் பிரதான வருமான மூலமாக காணப்படுவதோடு, நீண்ட காலமாக தனியார் நிறுவனங்களின் மூலம்

திரைப்பட விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இலக்கம் අමප/21/1024/305/022 மற்றும் 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் திரைப்பட விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தலுடன் தொடர்புடைய ஒழுங்கு முறையை கூட்டுத்தாபனம் பொறுப்பேற்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மேற்கூர்ந்த விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுதாபனத்தின் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(க) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் VII ஆம் பிரிவு 40 (1) ஆம் பந்தியின் படி குறித்த நிறுவனத்திற்கு தனக்கென உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டும் என்றாலும் உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினுள் சேவையாற்றிய உத்தியோகத்தர், 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திலிருந்து கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து நீங்கியதன் பின்னர் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு செயலிழந்து காணப்படுகின்றது.

(ச) கலாநிதி "லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்" அவர்களின் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தில் அருங்காட்சியகம் மற்றும் நூலகமொன்றின் கட்டிட நிர்மானிப்பதற்காக நிர்மான மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதி ரூபா. 99,965,061 ஆன தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்கு இரு தரப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதி அதன் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாநகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிட நிர்மானப் பணிகள் தொடர்பில் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மொத்தம் ரூபா. 3,134,107 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய வருட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த நிர்மானப் பணிகள் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருவதோடு, நிர்மானப் பணிகளை ஆரம்பித்துள்ள இந்த கட்டிடத்தில் உள்ள கம்பிகள் மிக மோசமான நிலையில் சேதங்களுக்கு உட்பட்டுள்ளதால் கட்டிடம் அழிவுற்று வருகின்றது.

(ஞ) கூட்டுத்தாபனத்தின் செலவுகளை ஏற்பதற்கு போதுமானளவு வருமானம் காணப்படாமை காரணமாக 2001 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரியிலிருந்து ஊழியர்களின் சம்பளம் மற்றும் மூலதன செலவிற்காக

நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டு மற்றும் கடந்த 05 வருட காலப்பகுதியினுள் கூட்டுத்தாபனத்தின் திறைசேரி மானியங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டு வரும் நிலைமை இருந்து வருவதன் காரணமாக தற்போதைய நிலையில் அரச நிதி உதவிகள் மற்றும் குறுகிய கால வைப்பு வட்டி வருமானம் காணப்படாமையினால் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்தேர்ச்சியாக நடாத்திச் செல்வது நிச்சயமற்ற தன்மையில் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ட) பகிரந்த நாடக கட்டுப்பாட்டுச் சபைக்காக புதிய கட்டிடமொன்றினை நிர்மானித்தில் மற்றும் குத்தகைக்கு வழங்குதல்

(i) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இலக்கம் 224 இனைக் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ள ஒரு மாடிக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டிலிருந்து பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபைக்கு குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுன் முடிவடையும் குத்தகை ஒப்பந்தத்தின் மற்றும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆந் திகதிக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டுள்ள போதும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 06 மற்றும் 08 இன் நிபந்தனைகள் மீறப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிடத்தை உடைத்து நீக்கி 2576 சதுர அடியைக் கொண்ட புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது.

(ii) 224 இனைக் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ள புதிய கட்டிட நிர்மானப் பணிகளின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆந் திகதி அடிக் கல் நட்டப்பட்டுள்ளதோடு, நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதி கழிந்த பின்னர் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆந் திகதி கட்டுப்பாட்டுச் சபையினால் கட்டிடத்தை நிர்மானிப்பதற்கான ஒப்புதலை வழங்குவதனை உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், இரு தரப்பினராலும் புதிய கட்டிடத்தை நிர்மானிப்பது, அதன் உரிமை மற்றும் செலவுகளை ஏற்றல் என்பன தொடர்பிலான நிபந்தனையை உள்ளடக்கி ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(iii) புதிய வாடகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் 2019

ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வரையான காலப் பகுதிக்கு உரித்தான குத்தகை வாடகைக்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டு இருக்கவில்லை. முறைசார்ந்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடும் வரை திருத்தங்களுக்கு உட்பட்டு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான மதிப்பிடப்பட்ட ரூபா. 400,0000 ஆன தொகை மாதாந்த வாடகையில் “நூற்றுக்கு 20 என்ற தொகை மற்றும் எஞ்சிய நூற்றுக்கு 80 என் தொகை கட்டிடத்தின் நிர்மானப் பணிகளுக்காக ஏற்கப்படும் செலவுகளுக்கு பயன்படுத்துவதற்கும் இரு தரப்பினரும் உடன்பட்டிருந்த போதும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆந் திகதி வரையில் குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாமல் போயுள்ளது.

(iv) இறுதியாக உள்ளடக்கப்பட்டிருந்த ஒப்பந்தம், முடிவடைந்து 04 வருடங்களின் பின்னர் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆந் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வரையான 02 வருடக் காலப் பகுதிக்கு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆந் திகதி புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தில் பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பில் எந்தவித நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வு தலைமை அதிபதி

